

281. கேட்ட நங்கையும், கண்ட நம்பியும்

தான் பிணிபூண்டு தவிப்பதைக் கேள்விப் பட்டுச் சகியாதவளாய்த் தன்னைத் தேடிக்கொண்டு வந்து விட்டாள் சீதை!— என்று இப்போது நம்பத் தொடங்கிவிட்டானாம் ராவணன். காதல் - உலகிலே நம்பிக்கைக் குப் பஞ்சமா? 'ஆஹா, அழகைப்போல் குணமும் இருக்கிறது. இவளுக்கு நான் செய்யத்தக்க பிரதியுபகாரமும் உண்டோ?' என்று கூட எண்ண மிடுகிறானாம்.

செவிக்கு இனியவள் இப்போது கண்ணுக்கும் இனியவளாகக் காட்சி வழங்குகிறாள்! எனினும், 'இவள் தானா அவள்?' என்று தங்கையையும் கேட்டு நிச்சயித்துக் கொள்ள விரும்புகிறான். உடனே 'தங்கையம்மாளைக் கூப்பிடுங்கள்' என்று கட்டளை பிறக்கிறது. 'இதென்ன? "சூரியனைக் கூப்பிடு, சந்திரனைக் கூப்பிடு" என்ற கட்டளை திடீரென்று மாறிவிட்டதே!' என்று எண்ணிக்கொண்டு ஓடியிருக்க வேண்டும் ராவண கிங்கரர்கள்.

கேட்ட நங்கையை நினைத்து நினைத்து உருகிக் கொண்டிருந்தான் தமையன். அந்தத் தங்கையோ தான் 'கண்ட நம்பி'யை நினைத்து நினைத்து உருகிக் கொண்டிருக்கிறாள். இவள் மூக்கையும் காதையும் காமாக்கினிக்கு ஆகுதியாகக் கொடுத்துவிட்டுத் தன் குலத்தையும் ஆகுதிசெய்யப் போகிறாளாம். இந்தத் 'தியாகி' தோன்றுகிறாள் ராவணன் முன்பு, இவன் சொன்ன, தான் கேட்ட நங்கையின் தியாகபுத்தியைக் குறித்து இவன் வியந்து கொண்டிருக்கும்போதே.

ராவணன் முன் நிற்கும் சீதையைச் சூர்ப்பணகை ஏன் கவனியாமலே வருகிறாள்? 'நீ நேராகப் பார். இதோ வான்போலும் கண்களிலே மையெழுதி (வானில் விஷம் தீட்டியது போலத்தான்!) மயில் போல என் முன் வந்து நிற்கிறாளே! இவள் தானா நீ சொன்ன சீதை?' என்று கேட்கிறான்:

பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள்
புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவன், 'நேருற
நோக்கு, நங்காய் !
மைந்நின்ற வாட்கண் மயில்நின்றென
வந்(து)என் முன்னர்
இந்நின்றவ ளாங்கொல் இயம்பிய
சீதை ?' என்றான்.

[நெய் — (இங்கே) கொழுப்பு. இந்நின்ற வளாங்கொல் — இதோ வந்து நின்ற இவள் தானா. இயம்பிய — (நீ முன்) சொன்ன.]

உடனே சூர்ப்பணகையும் நன்றாகப் பார்க்கிறாள். இதற்கு முன் கவனியாத தவறு தவறு தான். ஆ, என்ன கண்கள் ! இப்போது இவள் ராவணனைக் காட்டிலும் தெளிவாய்ப் பார்க்கிறாள். ஆனால் அஞ்சனம் தீட்டிய கண் இல்லையே, செந்தாமரைக் கண்தான், அஞ்சனமேனி தான் ! இந்தக் காதலர் - உலகில் அற்புதங்களுக்கு முடிவே இல்லையா ?

'செந்தா மரைக்கண்ணொடும், செங்கனி
வாயி னோடும்,
சந்தார் தடந்தோளொடும் தாழ்தடக்
கைக ளோடும்
அந்தார் அகலத்தொடும் அஞ்சனக்
குன்றம் என்ன
வந்தான் இவனாகும்அவ் வல்வில்
இராமன்' என்றாள்.

[சந்து ஆர் — சந்தனம் பூசப்பெற்ற. தடந்தோள் — பெரிய தோள்கள். தாழ் தடக்கைகள் — உத்தம லட்சணத்தின்படி தொங்கும் பெரிய கைகள். அந்தார் — அழகிய மாலை. அகலம் - மார்பு. வல்வில் — வலிய வில்.]

'இவள்தானா சீதை?' என்று கேட்டவனுக்கு 'இவன் தான் ராமன்' என்று பதில் கிடைக்கிறது. இந்தச் செந்தாமரைக் கண்களைத்தான் எவ்வளவு ஆசையோடு நோக்குகிறாள்! சிவந்த கனிபோன்ற வாய் இவளை வெறி கொள்ளச் செய்கிறது. இந்த வாய்க்குத்தானே,

தூப்போலக் கனிபலவும்
சுவையுடைய தரவல்லேன்

[தூப்போல — மாமிசம் போல.]

என்று ஆசையோடு அறிவித்தாள்? இப்போது இதுவே இவளுக்குச் 'செங்கனி'யாகத் தோன்றுகிறது.

சந்தனக் குழம்பு அப்பிய தோள்களும் பெரிய கைகளும் இவளைப் 'பித்தியினும் பித்தி, பெரும்பித்தி' ஆக்கி விடுகின்றன. மார்பில் பூசியிருக்கும் சந்தனத்தைப் பூமாலை மறைத்திருக்கிறதாம். காதலன் மணவாளக் கோலத்துடன் வந்து விட்டதாகவே எண்ணம்.

ராவணன் காணும் சீதை காணத்தோடு தான் ராவணன் அருகே வந்து நிற்கிறாள்; தோகை விரித்து ஆடாது அடங்கி நிற்கும் மயில் போலத்தான். ராமனோ நீலமலை உல்லாஸமாக நடை பயில்வது போல் கம்பீரமாக சூர்ப்பணகைப் பிராட்டியை நெருங்கி வருகிறான்.

வில் ஒன்றிற் கடிகை மூன்றில்
ஏறினர் விண்ணில் !

என்று கரன் முதலான வீரர்களின் உயிரை உண்ட வில்லை வருணித்தாளே, அந்த வில்லைத்தான் ‘அவ் வல்வில்’ என்கிறாள் இப்போது. அந்த வில் இப்போது கையில் இல்லை, சமாதானமாகத் திருமணத்திற்கே வந்திருப்பதால்! ஆனால் அந்த வில் ஏந்திய கை—அந்தோ!—சூர்ப்பணகையின் உயிரையும் உண்ணத் தொடங்குகிறது. இந்த நிலையில் தமையன் முன் ‘இன்னது சொல்லலாம், இன்னது சொல்லலாகாது’ என்பதையும் தெளியாது தான் கண்ட காட்சியை அப்படியே வெளியிடுகிறாள்.

கண்ட காட்சி அவ்வளவு தெளிவாய் இருக்கிறது சூர்ப்பணகைக்கு. நேரில் கண்ட நம்பியல்லவா? ராவணனுக்கோ கேட்ட நங்கையாதலால் இவ்வளவு தெளிவாக இல்லை.

தான் கண்டதற்கு மாறாகச் சூர்ப்பணகை விவரமாய்த் தெளிவாய்க் கண்டதை விண்டுரைத்ததும் ராவணன் அடையும் ஆச்சர்யத்திற்கு அளவே இல்லை. ‘பிறரை மயக்கும் மாய வித்தைகளில் நிபுணர்களான நமக்கும் மாயை விளைவிக்கின்றனரோ மனிதர்கள்?’ என்று ஆத்திரமாய்க் கேட்கிறான். அதற்கு விடை கூறும் சூர்ப்பணகை அமைதியாக அவன் கண்டது * ‘உருவெளித் தோற்றம்’ என்கிறாள்.



உருவெளித் தோற்றத்திற்குக் காரணம் 'நிலைத்த எண்ணம்' ('ஊன்றும் உணர்வு') என்று சொல்லி அது குறித்து ஒரு விஞ்ஞான சாஸ்திரி போலப் பேசுகிறாள் :

ஊன்றும் உணர்(வு)அப் புறம்ஒன்றினும்
ஓட வின்றி,
ஆன்றும் முளதாம் நெடிதாசை
கனற்ற நின்றாய்க்(கு),
என்றுன் எதிரே விழிநோக்கும்
இடங்கள் தோறும்
தோன்றும் மனையாள்இது தொன்நெறித்
தாகும்' என்றாள்.

[ஊன்றும் உணர்வு — ஊன்றிப் பதிந்த அறிவு நிலைத்த எண்ணம். ஆன்றும் உளதாம் — மிகவும் உண்டான. நெடிதாசை — நீண்ட ஆசை. கனற்ற - கனலால் சுட. நின்றாய்க்கு - நின்ற உனக்கு. என்று - பொருந்தி; இசைந்து. தோன்றும் அனையாள் — அவள் தோன்றுவாள். தொல்நெறித்து ஆகும் - பழைய நெறியே ஆகும்.]

அவனை வேறொருவரும் மயக்க வில்லை யென்றும், தானே தன்னை மயக்கிக் கொண்டானென்றும் சொல்லுகிறாள். 'உன் எண்ணம் நான் சொன்ன சீதையின் அழகிலே, அப்புறம் இப்புறம் ஓடாது, ஊன்றிப் பதிந்து விட்டது. இப்படி ஊன்றிய உணர்வு அல்லது நிலைத்த எண்ணம் ஆசையை மிகுதியாக வளர்த்து விடுகிறது. ஆசைத் தீ நீண்டு நிமிர்ந்து கனன்று பொங்குகிறது. இதனால் பகுத்தறிவு புகைந்து போகிறது. இந் நிலையை அடைந்த உன் எதிரே, மனோபாவம் வார்த்து விடுகிறது சீதை யின் வடிவத்தை. எனவே, உன் விழி நோக்கும் இடங்கள் தோறும் தோன்றுவாள் அவள்!' என்கிறாள். 'தோன்றும் மனையாள்' என்று தொனிக்க அழுத்திப் பேசுகிறாளே — அண்ணனுக்கு உத்ஸாகம் மூட்டத் தானா? பரிகாசமும் சிறிது கலந்திருக்கிறதா?

மேலும் சொல்லுகிறாள்: 'இது புதிய விஷயமன்று. நீண்ட காலமாக உலகம் இத்தகைய பொய்த் தோற்றங்களில் மயங்கி வருகிறது.' 'தவசிகள், யோகிகள், பக்தர்கள் முதலானவர்களும் காமுகர்போலத்தான், இஷ்ட மூர்த்தியைக் காண்பதும்!' என்ற குறிப்பும் 'தொன்னெறித்து ஆகும்' என்ற சொற்றொடரில் உள்ளடங்கிக் கிடக்கிறது என்றாலும் தவறாகாது.

மக்கள்-உள்ளத்தைத் துருவி ஆராய்ந்து பார்க்கும் ஒரு மனோதத்துவ ஞானிபோல் பேசுகிறாள் சூர்ப்பணகை. இப்படிப் பேசுகிறவள், சுருங்கக் கூறுமிடத்து 'அண்ணா, நீ கண்ட பெண்ணுரு உருவெளித் தோற்றமே. ஆசையால் எப்போதும் சீதையை நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆகை யால், சீதையைப் பார்க்கிறாய்!' என்கிறாள்.

'ஆனால் நீ ராமனைப் பார்க்கிறாயே. காரணம் என்ன?' என்று கேட்டு விடுகிறான் ராவணன். திடீரென்று சூர்ப்பணகையின் நிலைமை எவ்வளவு கஷ்டமாய்ப் போய் விட்டது, பாருங்கள்! என்ன விடை கூறி எப்படித் தப்பிக் கொள்ளப் போகிறாள்? அடுத்த வாரம் பார்க்கலாம்.

---

* உருவெளித் தோற்றம் - எதிரில் உருவம் உள்ளது போலத் தோன்றும் பொய்த் தோற்றம்.



282. பேதையும் மேதையும்

'நான் ஸீதையைக் கண்டதற்குக் காரணம் அந்த இடைவிடாத நினைப்பால் தோன்றிய உருவெளித் தோற்றம் என்கிறாய்; அப்படியே ஆகட்டும். நீ ராமனைக் கண்டது எப்படியோ?' என்று ராவணன் கேட்டதும், பளிச்சென்று சூர்ப்பணகை, 'ஏகாக்ர சித்தம் (ஊன்றும் உணர்வு) அன்பில்தானா ஏற்படுகிறது? பகையிலும் ஏற்படுகிறதே!' என்று பதில் சொல்லி விடுகிறாள்.

ஒரு மூளையும் பத்து மூளையும்

'செத்தால் அன்றித் தீராத துன்பம் அடையும்படி என்னை எப்போது இக்கோலம் கண்டானோ, அக்காலம் முதலாக நான் அவனை அனவரதமும் மறக்காமலே இருக்கிறேன்' என்று துணிந்து ஒப்புக் கொள்கிறாள்:

'எந்நாள்அவன் என்னை
இத்தீர்வரும் இன்னல்
செய்தான்,
அந்நாள்முதல் யானும்,
அயர்த்திலன் ஆகும்'
என்றாள்.

(தீர்வரும் — தீர்க்க முடியாத; செத்தால் அன்றித் தீராத. இன்னல் — துன்பம். அயர்த்திலன் — மறந்து விடாமலே இருக்கிறேன்.)

முன்பு இந்தத் தங்கை, தன் காமத்தைத் தக்க சமயத்தில் வெளிப்படையாக அண்ணனுக்குப் புலப்படுத்தி விட்டது போல் பேசியதும் உண்டு:

யான்கொண்(டு) ஊடாடும்
வண்ணம் இராமனைத்
தருதி என்பால்!

ஆனால், இந்தச் சமயம் அப்படிப் பேசுவது தகாது எனத் தீர்மானித்துத் தன் காமத்தை மறைத்துப் பேசுகிறாள்.

'இவள் தானா சீதை?' என்று கேட்டவனுக்கு, 'இவன்தான் ராமன்!' என்று பதில் சொல்லிவிட்டாள், காம மிகுதியால், தனக்குத் தோன்றிய உருவெளித் தோற்றத்தின்படி. தன் கண்ணெதிரே தோன்றும் பெண்ணை ஆணென்று சொன்னது பேதைமை என்று ராவணன், 'பேதாய்! உன் பேதைமை இருந்தவாறு என்னே!' என்று சூடாகச் சொல்லிவிட்டான். சுடச் சுடக் கொடுக்க வேண்டுமென்று சூர்ப்பனகை யாளும், 'நீ காமாதுரனாய் ஒரே நினைவாய் இருப்பதால் அந்த உருவெளித் தோற்றமே காண்கின்றாய்' என்று பதில் சொல்லிவிட்டாள். உடனே ராவணன், 'நான் தான் காமாதுரனாய் அவளைக் கண்டேன் என்றால், நீ ராமனைக் கண்டது எவ்வாறோ?' என்று தன் பத்து மூளைகளின் கூர்மையான அறிவு கொண்டு கிழித்துவிடப் பார்க்கிறான் சூர்ப்பணகையின் அறிவுத் திறமையை; அந்தப் பேதையைப் பேதையாக்கப் பார்க்கிறான். ஆனால் சூர்ப்பணகையின் ஒரு-தலை மூளை ராவணனுடைய பத்து மூளைகளையும் வென்று விடுகிறது.



போகட்டும்; அச்சத்தால் மறக்காதிருக்கிறாளா? அல்லது பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் தானா இப்போது? சீதையை ராவணன் வசமாக்கி இவள் ராமனை அடைவதே பழிக்குப் பழி வாங்குவது தான்! பழிக்குப் பழி வாங்கும் பகைமையுணர்ச்சியுடன், ராமனை அடையவேண்டும் என்ற காம உணர்ச்சியும் கலந்து கூத்தடிக்கிறது சூர்ப்பணகையின் இதய அரங்

கிலே இப்போது. இந்த நிலையிலும் ராவணேசுவரனின் தங்கை யல்லவா? — அறிவுக் கூர்மை சரியாகப் பதமாகத்தான் இருக்கிறது.

தங்கை சொன்னது பொருத்தம் தானே என்று தோன்றுகிறது தமையனுக்கு. 'தலைகீழாகப் புரண்டு நிற்கும் அன்பே பகைமை!' (hatred is inverted love) என்ற மானஸ தத்துவமும், காதலில் மண்டிய ஒருமையுள்ளமும் உருவெளித் தோற்றமும் பகையிலும் தோன்றக் கூடும், என்ற விஷய ஞானமும் ராவணனுக்கும் தெரிந்தவை தான். ஆகவே மனோதத்துவ சாஸ்திரிபோலப் பேசிய தங்கையின் விஞ்ஞான மனப்பான்மைக்குத் தலை வணங்குகிறது ராவணனுடைய அகன்ற நுண்ணறிவும். 'ஆமாம்' என்று அவன் சொன்ன சொற்களின் பொருத்தத்தை அங்கீகரிக்கின்றன பத்து வாய்களும்.

'இது நிற்க. என் உடம்போடு உயிரும் பற்றி வேகின்றதே! இந்தத் தீயை அணைத்து, இந்த விடியா இரவுக்கும் விடிவு காட்ட வழியும் உண்டோ?' என்று கொதிக்கிறது ராவண ஹிருதயம். 'அப்படி வா வழிக்கு! இனி நம் காரியம் ஜயம்' என்று குதிக்கிறது சூர்ப்பணகை யுள்ளம். அந்தக் கொதிப்பையும் இந்தக் குதிப்பையும் இதோ பாருங்கள் :



'ஆமாம்,அ(து) அடுக்கும்;என்
ஆக்கையொ(டு) ஆவி
நைய
வேமால்; வினையேற்(கு)இனி
என்விடி(வு) ஆகும்?
என்னக்,
'கோமான் உலகுக்(கு)ஒரு
நீகுறை கின்ற(து)
என்னே'!
பூமான் குழலாள்தனை
வவ்வுதி, போதி'
என்றாள்.

[அடுக்கும் — பொருந்தும். ஆக்கை — உடம்பு. வேமால் — வேகும். வினையேற்கு — இந்த வினையை உடைய எனக்கு. என் — என்ன. உலகுக்கு ஒரு கோமான் நீ — உலகம் முழுவதுக்கும் ஒரு சக்கரவர்த்தி, ஒரு சர்வாதிகாரி. குறைகின்றது என்னே — சிறுமைப்படுவானேன். பூமான் குழலான் — பூச்சூடிய, மாட்சிமைப்பட்ட, கூந்தலையுடைய சீதை. வவ்வுதி — அபகரித்து வருவாய். போதி — (இப்போதே) போவாய்.]

'எனக்கும் விடிவு உண்டா?' என்று வருந்திய ராவணனை நோக்கி,

நீயும் சாமானியன் போல வருந்துவானேன்? வலிமையே உரிமையாகக் கவர்ந்துவா, இப்போதே புறப்படு' என்று சூர்ப்பணகை ராவணனை உடனே தள்ளிவிடப் பார்க்கிறாள். ஆனால் அப்படி உடன்தானே பயண மாகிவிடவில்லை அரக்கன். அறிவு அடங்கி ஒடுங்க, ஆவிகுலைய, அந்த மாளு வஸ்தையில் அறிவு சூர்ப்பணகை சொன்னதை வாங்கி வைத்துக் கொண் டதே ஒழிய, வேறு எதுவும் செய்யச் சக்தியற்றிருந்தது.

புதிய மண்டபம்

இந்த நிலையில், தணியாது வளரும் தாபம் தீர்த்துக்கொள்ள ஒரு புதிய ஆலோசனை மட்டும் தோன்றியது. பல பருவங்களையும் அனுபவித்துப் பார்த்தாகிவிட்டது. நிறைமதி குறைமதி எல்லாம் ராவணனுடைய மதியைப் பரிகசித்துவிட்டன! இயற்கைப் பொருள்களால் தீராத தாபத்தைச் செயற் கைப் பொருளால் தீர்த்துக் கொள்ளலாமோ? — இந்த நினைப்பில் சந்திர காந்தக் கற்களால் ஒரு மண்டபம் நிர்மாணமாக வேண்டுமென்று கட்டளை பிறக்கிறது தெய்வத் தச்சனுக்கு.

சந்திரன் ஒளியைக் கண்ட அளவிலே சந்திரகாந்தக் கல் என்ற இரத்தினம் குளிர்ந்த நீரைச் சொரியுமாம் தாரை தாரையாக, பசுவின் மடி பாலைச் சொரிவது போலே. இந்தச் சந்திரகாந்த மண்டபத்தை ஒரு கற்பகச் சோலையின் மத்தியிலே, அழகினுக்கு ஓர் அணியை அணிவது போல், அமைத்து விடுகிறான் தெய்வச் சிற்பியான விசுவகர்மன்.

இம் மண்டபம் முதன் முதல் சிற்பியின் மனத்திலே பூர்ண சௌந்தரி யத்துடன் சிருஷ்டியாகிறது; கைத்திறனால் ஸ்தூல சிருஷ்டியாகிறது.

சிந்தா வினைஅன்றியும்,
செய்வினை யானும்
செய்தான்.

[சிந்தாவினை — சிந்தையின் தொழில். செய்வினையானும் — கைத் தொழிலாலும்.]

இம் மணி மண்டபத்தைச் சிந்தாவினை, செய்வினை என்ற இரட்டைத் தொழிலால் நிருமிக்கும்போதே, ஓர் அம்சம் சிற்பியின் முக்கிய கவனத் திற்கு உரியதாகிறதாம்:

பூந்தென்றல் புகுந்(து)உறை
சாளர மும்பு-
னைந்தான்.

[புகுந்து உறை — புகுந்து உலாவத் தக்க. சாளரம் — பலகணி. புனைந்தான் — அழகாய் அமைத்தான்.]

எதிர் எதிராகப் பல ஜன்னல்கள் அமைத்து, அந்த உபயோகமான ஜன்னல்களை வெகு அழகாகவும் செய்திருக்கிறான். தெய்வச் சிற்பியின் மேதை, ஐயோ! ஜன்னல்களையாவது மறந்திருக்கலாகாதா?



283. வந்தது காற்று, கூற்று?

ஆபாரணங்கள் ஜொலிக்கும் தெய்வ மகளிர் இருபக்கத்திலும் இரத்தின தீபங்கள் ஏந்திவர, வருகின்றான் ராவணேசுவரன், தெய்வச் சிற்பி கட்டி நிறுத்திய சந்திரகாந்த மண்டபம் காண. அந்த ஸ்திரீரத்தினங்கள் இரத்தின தீபம் கொண்டுதான் இருளைப் போக்கவேண்டுமா? அந்த முக சந்திரர்களுக்கு முன் எந்த அந்தகாரம் நிற்கமுடியும்?

முகத்திற்கு முகமன்

ஆனால், இருள்தான் சாமானியமா? எத்தனையோ இருட்டைத்தகடு செய்து செய்து ஆயிரம் கோடி என்று ஒருங்கு சேர்த்து அந்த இருட்டுத் தகடுகளையெல்லாம் அடுக்கி அமுக்கி வைத்ததுபோல் இருக்கிறதாம் அந்த ராத்திரியின் அந்த இருட் பொழுது. அத்தகைய இருட் குவியலும் முன்னிற்க மாட்டாமல் சிதறிப் பதறி ஓட்டமெடுக்கிறதென்றால், இந்த மகளிர் முகங்கள் என்ற சந்திர பிம்பங்களை வருணிப்பதும் எளிதாகுமா? மனோபாவமும் சிதறி ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான்! இந்த நிலையில் கவிஞனுடைய பாவனாசக்தி ஓடி விளையாடிக் களிக்கூத்தாடுவதைப் பாருங்கள்:

அல்ஆயிர கோடி அடுக்கிய(து)
ஒத்த தேனும்,
நல்லார் முகமாம் நளிர்வானில(வு)
ஈன்ற நாமப்
பல்லாயிர கோடி பனிச்சுடர்
ஈன்ற திங்கள்
எல்லாம் உடனாய், இருளோடி
இரிந்த தன்றே!

[அல் - இருட்டு; ராத்திரி. நல்லார் - அழகிய பெண்கள். நளிர் - குளிர்ந்த. வான்நிலவு — வானத்து வெண்ணிலா. நாமம் - பெருமை. திங்கள் - சந்திரன். இரிந்தது - நிலைகெட்டுச் சிதறி ஓடியது.]

இயற்கைவருணனைகள்

தளிர்களாலும் பூக்களாலும் அமைந்த மெத்தை விரித்த மஞ்சத்திலே போய் அமர்ந்திருக்கிறான் ராவணேசுவரன். பால்நிற வெண்பட்டு மெத்தை சுத்தமாய், அழகாய் விரிக்கப் பெற்றிருக்கிறது. இதற்குக் குளிர்ச்சியும் இனிமையும் தருகின்ற மலர்களுடன், அந்த இளந் தளிர்களை யும் சிறப்பாகக் காட்டுகிறான் கவிஞன் :

பண்தரு சுரும்பு சேரும்
பசுமரம் உயிர்த்த பைம்பொன் —
தண்தளிர் மலரிற் செய்த
சீதளச் சேக்கை சார்ந்தான்.

[பண் — (இங்கே) வண்டுகளின் ரீங்காரம். சுரும்பு — வண்டுகள். பசுமரம் — பச்சை மரங்கள். உயிர்த்த — புதிதாகத் தந்த. பைம்பொன் — தண்தளிர் — பொன்னிறமான இளந்தளிர்கள். சீதளச் சேக்கை — குளிர்ச்சியான படுக்கை.]

பச்சைப் பூமரங்களுக்கிடையே வண்டுகள் பண் பாடுவதையும், அம் மரங்கள் பைம்பொன்மயமான இளந் தளிர்களை உயிர்த்துக் கொழிப்பதை யும் கவிஞன் எப்படி அனுபவித்திருக்கிறான் பாருங்கள்! 'இப்படி அனுப விக்க வேண்டும் இயற்கையை' என்று நமக்கும் வழிகாட்டுவது போல் இருக் கிறதல்லவா?




மண்டபத்தைச் சூழ்ந்துள்ள சோலைக்கும் வெளியே பெண்கள் நின்று விடுகிறார்கள். இப்பொழுது 'ஜிலு ஜிலு' என்று கடற்காற்று வீசுகிறது. கடற் பரப்பிலே நீந்தி வருவதோடு இக்காற்று, ஆபரணங்களுக்கும் ஆபரணமாய்த் திகழும் அந்த அழகிகள் கூந்தலில் சூடிக் கொண்டிருக்கும் பலவகையான பூக்களின் பரிமளக் கடலிலும் நீந்தி வருகிறதாம். இப்படி இரண்டு கடல்களில் ஆனந்தமாக நீந்தி வந்து ராவணனை அடைவதற்கு முன் இந்தக் காற்றுக்கு வரவேற்பு தோட்ட விருந்து எல்லாம் முறையே நடைபெறுகின்றனவாம்.

சரி; இந்த 'வாயு புராண'த்தை என் இலேசான வசனத்திலேயே முடித்து விடாமல் கவிதையந்தென்றலிலேயே அனுபவித்துப் பார்க்கலாமே:

நேரிழை மகளிர் கூந்தல்
நிறைநறை வாசம் நீந்தி,
வேரியஞ் சரளச் சோலை
வேனிலான் விருந்து செய்ய
ஆர்கலி அமுவம் தந்த
மருந்தென, ஒருவர் ஆவி
திரினும் உதவற்(கு) ஒத்த
தென்றல்வந்(து) இறுத்ததன்றே.

[நேரிழை மகளிர் — தேர்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த சுந்தரிகள். நிறைநறைவாசம்—நிறைந்துள்ள, தேனோடு கூடிய, மலர்களிலுள்ள நறுமணம். வேரியம் சரளம் சோலை — பரிமளத்தையுடைய அழகிய இனிய சோலையில். வேனிலான் — இளவேனில் என்ற வசந்த ருதுவின் அதிதேவதை. ஆர்கலி — நிறைந்த ஓசையோடு கூடிய சமுத்திரம். அமுவம் — பரப்பு. மருந்து — (இங்கே) மருந்துகளுக்கும் மருந்தான தேவாமிருதம். வந்து இறுத்தது — வந்து சேர்ந்தது.]

கற்பகச் சோலைக்கு இடையே மாகதத்தைக் கீறிப் பதித்த வெண் முத்தைப்போல் அமைந்திருந்த சந்திரகாந்த மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன் காற்றுக்குச் சம்பிரமமாக நடக்கிறது, தோட்டத்திலே ஒரு விருந்து. வஸந்த ருதுவின் அதிதேவதையாகிய வஸந்தனை வரவேற்று விருந்தளிக்கிறானும். வடை, போளி, ஆமவடை, அல்வா, ஜிலேபி...— என்ற ஆடம்பர ராட்சஸ விருந்தல்ல இது. சோலையின் வாசனை, அழகு, இனிமை, குளிர்ச்சி முதலிய வற்றையே விருந்தாக உண்டு மந்தமாக அசைந்து வருகிறதாம் தென்றல் மண்டபத்திற்குள்ளே. 'கடற்காற்று? கடல் தந்த அமிர்த சஞ்சீவியா?' என்று ஆச்சரியப் படுகிறோம்.



புராண காலத்தில் தானா அமிர்தம் அளித்தது கடல்? இன்றும் அமிர்தம் அளித்த

வண்ணமா யிருக்கிறது. அந்தத் தெய்வ மருந்து இன்றும் என்றும் அமிர்த சஞ்சீவி தானே ? என்றெல்லாம் சொல்வதுபோ லிருக்கிறது,

ஆர்கலி அழுவம் தந்த
மருந்தென ஒருவர் ஆவி
தீரினும் உதவற் கொத்த
தென்றல்வந் திறுத்த தன்றே

என்ற கவிஞனின் தமிழ்த் தென்றல். உயிர் போய்விட்டதே என்றால், 'இதோ போன உயிரைத் திரும்பக் கொணர்ந்து தந்து விட்டேனே!' என்கிறதாம் தென்றல்.

ஊதைகள் சொரிவன,
உயிர்உறும் அமுதம்

[ஊதை - குளிர்ந்த காற்று. உயிர் உறும் - உயிரை அதிகரிக்கச் செய்யும்; உயிர்த் தீயை விசிறி ஜொலிக்கச் செய்யும்.]

என்று பாலகாண்டத்திலே ராமராஜ்யத்திலே மெல்லெனத் தவழும் அந்தத் தென்றல்தான் இங்கும் வீசுகிறது, குதூகலமாய்க் கடற் காற்றாக. ஆனால் அனுபவிக்கக் கொடுத்து வைக்க வில்லையே இப்போது !

பாம்பு, பாம்பு !

உயிர் தரும் தென்றலும் மரண வேதனையே தருகிறது ராவணனுக்கு. சந்திரகாந்த மண்டபத்தின் சீதளத்தோடு தென்றலின் குளிர்ச்சியும் சேர்ந்து கொண்டால், கேட்கவா வேண்டும் ?

சாளரத் தூடு வந்து
தவழ்தலும் தரிக்கல் தேற்றான்,
நீள்அரத் தங்கள் சிந்தி
நெருப்(பு)உக நோக்கும் கண்ணன்,
வாழ்மனை புகுந்த(து) ஆண்(டு)ஓர்
மாசுணம் வரக்கண் டன்ன
கோளுறக், கொதித்து விம்மி
உழையரைக் கூவிச் சொன்னான்.

[சாளரம் - பலகணி. தரிக்கல் தேற்றான் - பொறுக்க மாட்டாதவனாய். நீள் - நீண்ட. அரத்தங்கள் - இரத்தத் துளிகள். நெருப்பு உக - நெருப்புப் பொறிகள் சிதற. வாழ் மனை - வாழும் வீடு. ஆண்டு - அப்பொழுது. மாசுணம் - (இங்கே) மலைப் பாம்பு. கண்டு அன்ன - கண்டாற்போன்ற. கோள் - கொடுமை. உழையர் - அருகிலுள்ள பரிஜனங்கள்.]

வாழவந்த மனையில் மலைப்பாம்பும் வந்து சேரக் கண்டால் எப்படி இருக்கும், நாள் நட்சத்திரம் பார்த்து புது மனை புகுந்தவனுக்கு. 'உத்தரவு இல்லாமல் இந்த மலைப் பாம்பு—இல்லை, இந்தத் தென்றல் ஏன் இப்படி உள்ளே வந்தது ?' என்று சீறுகிறான். எதிர் எதிராக ஜன்னல்கள் இருக்க நடுவே இருந்தால், அந்த ஜன்னல்கள் வழியாகக் காற்று வரும் போது, அதற்கும் தடையுத்தரவு போடமுடியுமா? இந்தச் சர்வ சாதாரண விஷயத்தையும் இந்தச் சர்வாதிகாரிக்குப் பாமரர்களான காவலர்கள் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது இப்போது !

'காற்றைச் சீறிக் காரியமில்லை; கூற்றும் வந்து சேரக்கூடுமே நாம் இருக்கும் நிலையில்!' என்று சிறிது தெளிவும் பிறக்கிறது, கருமேகத் திரளைக் கிழித்துத் துடிக்கும் ஒரு மின்னற்பாம்பு போலே. உடனே மந்திரிகளை அழைத்து வரும்படி ஆணை பிறக்கிறது.



284. மாரீச மகரிஷி

ஆலோசனை அதி ரகசியமாக நடைபெறுகிறது. தேரிலும் குதிரையிலும் யானையிலும் பல்லக்கிலும் கம்பீரமாக வந்து சேர்ந்த அமைச்சர்கள் என்ன சொன்னார்கள் என்பது தெரியவில்லை. என்ன சொல்லியிருக்கக் கூடும் என்பதை ஊகித்துப் பார்க்கலாமே!

ராவணனோ நினைத்ததை யெல்லாம் நினைத்தபடியே செய்து முடித்து விட வேண்டும் என்ற ஆத்திரமும் ஆங்காரமும் கொண்ட சர்வாதிகாரி இப்பேர்ப்பட்டவன் அமைச்சர்களுடைய ஆலோசனைகளை யெல்லாம் மாசறச் சீர் தூக்கிப் பார்த்துத் தன்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள முடியுமா? அவர்கள்தாம் துணிந்து மாறுபடும் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்க முடியுமா? எனினும் மந்திரிகளுடன் கலந்து ஆலோசனை செய்யாது மனம் போனபடி நடந்து கொண்டான் என்ற பழிப்புக்கு இடமில்லாமல், மனம் போனபடி யெல்லாம் துணிந்து போகும் ராவண சர்வாதிகாரியும் நடந்து கொண்டானும் :

வந்தமந் திரிய ரோடு
மாசற மனத்தின் எண்ணிச்,
சிந்தையில் நினைந்த செய்யும்
செய்கையன், தெளிவில் நெஞ்சன்,
அந்தரம் செல்வ(து) (ஆண்டு) ஓர்
விமானத்தின் ஆரும் இன்றி,
இந்தியம் அடக்கி நின்ற
மாரீசன் இருக்கை சேர்ந்தான்.

மாசு அற — குற்றம் இல்லாதபடி. எண்ணி — (இங்கே) ஆலோசித்து. தெளிவில் — தெளிவில்லாத. அந்தரம் — ஆகாய வழி. ஆண்டு — அப்பொழுதே. இந்தியம் — இந்திரியம்.]

மந்திராலோசனை முடிந்ததும் அப்பொழுதே ராவணன் ஒரு விமானத்தில் ஏறி ஆகாயமார்க்கமாய்ப் போகிறான். கூட யாரும் இல்லாமல் தன்னந் தனியே போகிறான் விமான ஓட்டியும் இல்லாமல், தானே தன் விமானத்தை ஓட்டிக்கொண்டு. எங்கே, ஏன்? — யாருக்கும் தெரியாது அமைச்சர் தவிர. அவர்களுக்கு மட்டும் 'மகரிஷி' மாரீசனின் ('இந்திரியம் அடக்கி நின்ற மாரீசன்) தவ வனத்திற்குப் போகிறான் சக்கரவர்த்தி என்று தெரியும்.

இருவகை ஆலோசனை

இந்த மந்திராலோசனையில் ஆலோசனை தான் எப்படி நடந்திருக்கக் கூடும்? தான் வரவழைத்த நிபுணருடன் நவீன சர்வாதிகாரி எப்படிக் கலந்து ஆலோசிக்கிறாரோ, அப்படியே ராட்சஸ சர்வாதிகாரியும் ஆலோசித்திருக்கக் கூடும். 'நிபுணர்களே! உங்கள் புத்திமதிக்கு வந்தனம்' என்று தாம் பெற்றுக்கொள்ளாத பொருளுக்கு வந்தனம் என்ற விலையையும் கொடுத்து விட்டாராம் ஒரு சர்வாதிகாரி. இவரே குறிப்பிட்ட நேரம் முழுதும் பேசித் தீர்த்துவிட்டதால் அவர்களுக்குப் பேசவே அவகாசம் கிடைக்கவில்லை. மணி அடித்துச் சபை கலையும்போது நிபுணர்கள் சொல்லாத ஆலோசனைக்குப் பாராட்டும் கிடைத்துவிட்டது. இந்த விதமாக ராவண சர்வாதிகாரியும் நடந்திருக்கலாம் தன் மந்திரி சபையிலே.

வேறு விதமாகவும் நடந்து கொண்டிருக்கலாம். வேறொரு நவீன மேதாவி தம்முடைய ஆலோசகர்கள் இஷ்டப்படியெல்லாம் பேசிக் கொண்டே போவதற்குத் தாராளமாக அனுமதி அளித்துவிட்டார். ஆனால் அவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்பதே இவருக்குத் தெரியாது. அந்த ஆலோசனை — மாசு தன் மனதில் கலந்து விடாதபடி தன்னுடைய எண்ணங்களையே இவர் எண்ணிக் கொண்டிருந்தார், அவர்கள் பேசும் போதும். தன் சிந்தையில் நினைத்ததைத் தான் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் உறுதியாகவே இருந்தது. இந்த நவீன மேதை போலத்தான் பத்துத் தலைமேதையும்



நடந்து கொண்டிருக்கக் கூடுமோ? இந்த ஊகத்திற்கு மிகவும் பொருத்தமா யிருக்கிறது,

வந்தமந் திரிய ரோடு,
மாசற மனத்தின் எண்ணிச்
சிந்தையில் நினைந்த செய்யும்
செய்கையன்

என்ற கவிதைப் பகுதி.

இப்படி யெல்லாம் நாம் ஆலோசனை செய்து முடிப்பதற்கு முன்பே, ராவண விமானம் படுவேகமாய் முடுகிப் போய் 'மகரிஷி'யின் தவவனத்தில் இறங்கி விட்டது. தவசியும் தன்னந் தனியாகவே இருக்கிறான். தன்னைச் சக்கரவர்த்தி மறந்து விட்டதாகவே நினைப்பு. மறந்தவன் திடீரென்று நினைத்துக் கொண்டு வந்து விட்டதில் மகரிஷிக்கு மகிழ்ச்சியில்லை, பயம்தான்!

இந்திரியம் அடக்கி நின்ற முனிவரைச் சக்கரவர்த்தி எதிர்கொண்டு வரவேற்று உபசரிப்பதையும், தவவனம் போய்த் தவசிகளை வணங்கி ஆசி பெறுவதையும் கேட்டிருக்கிறோம். ஆனால் ராவண சக்கரவர்த்தியை வரவேற்கிறார் மாரீச மாமுனி, எவ்வளவு பயபக்தியுடன்:

இருந்தமா ரீசன், அந்த
இராவணன் எய்த லோடும்,
பொருந்திய பயத்தன், சிந்தை
பொருமுற்று வெருவு கின்றான்,
கருந்தட மலைஅன் னானை
எதிர்கொண்டு கடன்கள் யாவும்
திருந்திய செய்து, செவ்வித்
திருமுகம் நோக்கிச் செப்பும்.

[பொருமுற்று — பொருமத் தொடங்கி. கருந்தட மலை அன்னானை — கரிய பெரிய மலை போன்ற அந்த ராவணனை. கடன் — (இங்கே) கடமையாகிய உபசாரம். திருந்திய — திருந்த. செவ்வித் திருமுகம் — அரசுரிமைப் பொலிவும் வீரப்பொலிவும் செறிந்த சக்கரவர்த்தியின் முகம். செப்பும் — சொல்பவன் ஆனான்.]

மாமாவும் மருமகனும்

சிந்தைப் பொருமலுடன் திடுக்கிட்ட நெஞ்சிலிருந்து, 'வந்த காரியம் என்னவோ?' என்ற வார்த்தை வெளிப்படுகிறது. அப்போது படபடென அடித்துக் கொள்ளும் நெஞ்சுத் துடிப்பை 'ஸ்டெதஸ்கோப்' வாயிலாகக் கேட்பதுபோல் கேட்கிறோம் இந்தப் பாட்டிலே:

'சந்த மலர்த்தண் கற்பக
நீழல் தலைவற்கும்,
அந்தக னுக்கும் அஞ்ச
அடுக்கும் அரசாள்வாய்!
இந்த வனத்(து)என் இன்னல்
இருக்கைக்(கு), எளியோரின்
வந்த கருத்தென்? சொல்லுதி'
என்றான்; மருள்கின்றான்.

[சந்தம் — அழகு. தண் — குளிர்ச்சியான. கற்பக நீழல் தலைவன்— தேவேந்திரன். அந்தகன் — யமன். அடுக்கும் — பொருந்திய. ஆள்

வாய் — ஆட்சி நடத்துகிறவனே. இன்னல் இருக்கை — துன்பமும் நாளுமாய் இருக்கும் இந்த இருப்பிடம். எளியோரின் — எளியவர் போல. என் — என்ன. சொல்லுதி — சொல்வாய். மருள்கின்றான் — மயங்குகிறான்.]

'தேவராஜாவும் யமராஜாவுங் கூட நடுங்க ஆட்சி நடத்தும் ராவணேசுவரனாகிய நீ, சிறிதேனும் துன்பமும் சேர்ந்து வசிக்கும் இந்த இடத்துக்கு இப்படி எளியவர் போலத் தனியே வந்த கருத்து என்ன?' என்ற மாரீசன் கேள்வியிலும், கேள்வியை வெளியிடும் செய்யுளோசையிலும் எவ்வளவு படபடப்பு!

பதில் சொல்லும்போது ராவணனும் படபடத்துப் பேசுகிறான். மகரிஷியானாலும் மாமா அல்லவா? 'தான் ஆடத் தசை ஆடும்' என்றவாறு மாமாவின் படபடப்பு மருமகனையும் தொத்திக் கொண்டதா?

ஆன தனைத்தும் ஆவி
தரித்தேன், அயர்கின்றேன்

[ஆனதனைத்தும் - ஆனமட்டும்]

என்று தொடங்கியவன், வலிமையில்லாத மானுடர் திடீரென்று வலிமை பெற்றது குறித்தும், அவர்களுடைய வாள் நீண்டு மாரீசனுடைய மருமகளின் மூக்கையே அரிந்து விடத் துணிந்தது குறித்தும்; அது மாமாவின் மரபுக்கும் தன் மரபுக்கும் ஒருங்கே மூக்கறுப்பானது குறித்தும் ஆத்திரமாய்ப் பேசுகிறான் மருமகன்.

மருமக்கள் ஒரே மனிதனால் வதைக்கப்பட்ட செய்தியையும் எவ்வளவு நெஞ்சுப் பதைப்புடன் வெளியிடுகிறான்! மாரீச நெஞ்சிலே உதைப்பது போல் வந்து விழுகிறது வார்த்தை:

திருகு சினத்தார், முதிர
மலைந்தார், சிறியோர், நாள்
பருகினர் என்றால், வென்ற
நலத்தின் பழியன்றோ?
இருகை சுமந்தாய், இனிதின்
இருந்தாய்! இகல்வேல்உன்
மருகர் உலந்தார், ஒருவன்
மலைந்தான், வரிவில்லால்.

[திருகு சினத்தார்—முறுகிய கோபத்தால் புத்தி திரிந்து மாறுபட்டவர்கள். முதிர — மிகுதியாக. மலைந்தார் — போரிட்டனர். சிறியோர் — அற்பர்கள்; (இங்கே ராம லட்சுமணரைக் குறிப்பிடுகிறான் ராவணன்). நாள் — ஆயுள் நாள். பருகினர் — குடித்துவிட்டார்கள்; (இங்கே) ஒழித்து விட்டார்கள். வென்ற நலத்தின் பழி — நமது வெற்றிப் பெருமைத்திற்கு ஒரு பழி. இகல் வேல் — வலிய வேலாயுதம். உலந்தார் — அழிந்து போனார்கள். வரி வில் — கட்டமைந்த வில்.

'பழி வாங்கப் பயன்படாமல் இந்த இரு கைகளையும் நீ திவ்யமாகச் சுமந்து கொண்டிருக்கிறாயே மாமா! இந்தக் காட்டில் இனிய பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருக்கத்தானா?' என்று மருமகன் சூடு போட்டும், சூடு உறைக்கவில்லை இந்திரியம் அடக்கி நின்ற இந்த மகரிஷி-மாமாவுக்கு!

இப்படிக் காண்டாமிருகம் ஆவதற்குத் தானா, தவஞ் செய்ததெல்லாம்?



285. மாரீச வேதாந்தம்

மகா பாரதத்திலே சகுனி மாமா; ராமாயணத்திலே மாரீச மாமா. இருவரும் வஞ்ச நெஞ்சர்கள். சிறந்த போர் வீரரும் அல்ல. ஆனால் இந்த மாமா வேதாந்த மாமா! சகுனிக்கோ வேதாந்த வேஷம் பிடிக்கவும் இல்லை, பிடிபடவும் இல்லை. மாரீச மாமா விசுவாமித்திரருடைய வேள்வியை அழிக்க முயன்று ராம பாணத்திற்குத் தோற்று அந்தத் தோல்வி - மனப்பான்மையிலேயே வெம்பிப் பழுத்த வேதாந்த மனப்பான்மை பெற்றவன்.

பயம் கோபமானது

ராவணன் மாரீச கோபத்தை எழுப்ப முயன்றும் பயன் இல்லையென்று கண்டு, தானே கோபத்தாலும் மானத்தாலும் மரணாவஸ்தைப் படுவதாகச் சொல்லுகிறான். மருமகனிடம் அனுதாபமும் பிறக்கவில்லை வேதாந்த மாமாவுக்கு. ‘உன் உதவி பெற்று அந்த மனிதர்களுடன் வாழும் பெண்ணைக் கவர்ந்து பழி தீர்த்துக்கொள்ள வந்தேன்’ என்று தந்திரமாகத் தான் வந்த காரியத்தையும் வெளியிட்டான் மருமகன். ஆனால் மாரீசனை ஏமாற்ற முடியுமா?

காராசம் காய்ச்சி நடுச் செவியில் செலுத்தியதுபோல் சொல் செவியில் விழுந்ததும், ‘சிச்சி!’ என்று காதுகளை இறுகப் பொத்திக் கொள்கிறான். இப்போதுதான் மாரீசனுக்குக் கோபம் வருகிறது:

இச்சொல் · அனைத்தும்
சொல்லி அரக்கன்,
எரிகின்ற
கிச்சின் உருக்கிட்(டு)
உய்த்தனன் என்னக்
கிளராமுன்,

சிச்சி எனத்தன்
'மெய்ச்செவி பொத்தித்
தெருமந்தான்,
அச்சம் அகற்றிச்
செற்ற மனத்தோ(டு)
அறைகின்றான்.

[கிச்சு – நெருப்பு. உருக்கு இட்டு – இரும்பை விட்டுக் காய்ச்சி. உய்த்தனன் என — செலுத்தினாற் போல. கிளாமுன் — தூண்டிய வுடனே. சிச்சி—சீச்சீ. மெய்ச் செவி—உடம்பிலுள்ள காதுகள். தெருமந்தான்—மனம் சுழன்றவனாய். செற்றம் மனத்தோடு—கோபம்கொண்ட மனத்தோடு. அறைகின்றான்—(இங்கே) துணிந்து முழக்கினான்.]

ராவண பயம் போய்விட்டது இப்போது; ராவணன் மீது கோபமாகி விட்டது. காரணம் ராமனிடமுள்ள பயம்தான். இதனால்தான்,

மன்னா! நீநின்
வாழ்வை முடித்தாய்.
மதியற்றாய்!

என்ற பீடிகையோடு பேசுகிறான்.

சூர்ப்பணகை அண்ணன் குறையை அறிந்திருந்தது போல், மாமனும் மருமகனை அறிந்திருந்தான். 'தருமம்தான் ஈரும் கண்டாய்!'— தருமம் ஈம்பம் போட்டு அறுப்பதுபோல் தன் விரோதிகளை அறுத்துத் தள்ளி விடும் — என்கிறான்.

கண்டகர் உய்ந்தார்
எவர் ஐயா?

[கண்டகர் – (பொதுஜன வாழ்க்கைக்கு) முள்ளைப் போன்ற துஷ்டர்கள். உய்ந்தார் – பிழைத்தார்.]

என்று கேட்கிறான்.

விராதனுக்குத் துக்கம்!

இந்தத் தருமோபதேசம் பலிக்குமா மருமகனிடம்? 'பயந்தவன் பயமுறுத்துகிறானே!' என்று வியந்தவனாய் ராவணன் கேட்டுக் கொண்டிருக்கிறான். இதுதான் சமயமென்று, காடெல்லாம் அடைத்துக்கொண்டு வந்தானே ராமன் முன் 'ஆலிபூதம்' போலே, அந்தக் கொடிய விராதனை ஞாபகப்படுத்துகிறான ராவணனுக்கு:

வெய்யோர் யாரே
விர விராதன்
துணை வெய்யோர்?
ஐயோ! போனான்
அம்பொடும் உம்பர்க்(கு)!

[வெய்யோர் – கொடியவர்களில். விராதன் துணைவெய்யோர் – விராதன் அவ்வளவு கொடியவர். உம்பர்க்கு – மேலுலகத்திற்கு.]

துஷ்டவிராதனை 'வீர விராதனன்' என்கிறான், 'மகா அலெக்ஸாந்தர்,' 'மகாநெப்போலியன்' என்று மேலநாட்டார் தங்கள் வீரர்களைப் போற்றுவது போலே. 'ஐயோ போனான்!' என்று ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கிறான். இந்த வேதாந்திக்குத்தான் எவ்வளவு அனுதாபம் 'வீர விராதன்' மறைவு குறித்து! 'போனான் அம்பொடும் உம்பர்க்கு!' என்று

எவ்வளவு ரஸமாக வருணிக்கப்படுகிறது இந்த மறைவு! அம்போடே போய் விட்டானும் மேலுலகத்திற்கு. 'அந்த ஒரு அம்பு நஷ்டம் ராம னுக்கு?' என்ற பரிதவிப்பு ஒரு கடல்போல அலை பாய்கிறது, 'ஐயோ!' என்ற அந்தச் சொட்டுக் கண்ணீருக்குப் பின்னே.

உண்மையில், விராதனை ராமலட்சுமணர்கள் வாள்கொண்டு தோள் துணித்தார்கள். ஆனால் இந்தச் செய்தி சரியாக மாரீசனுக்கு எட்டி யிருப்பதாகத் தெரியவில்லை. 'விராதன் மாண்டான்' என்றதும், தன்னைப் பயமுறுத்திய ராமபாணமே அவனுக்கும் கூற்றாகி யிருக்கவேண்டும் என்று எண்ணி விட்டான்.

வேதாந்தப் பூச்சாண்டி

விராத மாணத்தை ஒட்டி நிலையாமைத் தத்துவத்தை ராவ ணேசுவரனுக்கே போதிக்கவும் துணிந்து விட்டான் மாரீசன்.

மாண்டார் மாண்டார்;
நீஇனி மாள்வார்
தொழில் செய்ய
வேண்டா, வேண்டா!

என்று எச்சரிக்கை செய்து விட்டு, மேலும்,



நின்றும், சென்றும்
வாழ்வன யாவும்
நிலை யாவால்,
பொன்றும் என்னும்
மெய்ம்மை உணர்ந்தாம் !

[நின்றும் — அசையாமல் நின்றும். சென்றும் — அசைந்து சென்றும். வாழ்வன — வாழும் சராசரப் பொருள்கள். பொன்றும் — அழிந்துவிடும். உணர்ந்தாம் — உணர்ந்து கொண்டோம்.]
என்று நிலையாமையை நிலைநாட்டுகிறான்.

என்ன அதிசயம்! 'தருமோபதேசமும் வேதாந்த உபதேசமுமாய் இருக்கிறதே—ஞானியாகி விட்டான் மாரீசன் !' என்று எண்ணிவிட மாட்டீர்கள். அது மாரீச மாமாவுக்கு அநீதியல்லவா?

அப்படியானால், இந்த வேதாந்தம் இந்த மாமாவுக்கு எப்படி உதயமாயிற்று? தன் தாயையும் தம்பியையும் யமபுரத்திலும், தன்னைக் கடலிலும் தள்ளிவிட்ட ராம பாணம்தான், நிலையாமையின் தத்துவத்தை மாரீச மூளைக்குள் இவ்வளவு அழுத்தமாய்த் திணித்து வைத்திருக்கிறது! தோல்வியில் முளைத்துக் கவலைநீர் பாயப் பயத்திலே வளர்ந்த பயிர் !

'இது இங்கே செல்லாது மாமா!' என்று பதில் சொல்லுகிறான் ராவணன். நிலையாமைத் தத்துவமா ராட்சஸ மகாராஜ்யத்தை நிலை நிறுத்தி யிருக்கிறது? விராதப் பூச்சாண்டியும் வேதாந்தப் பூச்சாண்டியும் காட்டிப் பயமுறுத்த முடியுமா ராவண சர்வாதிகாரியை? இதற்கெல்லாம் பயந்தால் ராவணன் ராவணனா?

வடக்கே பரமேசுவரன், தெற்கே ராவணேச்வரன்! அந்த ஈசுவரனின் வெள்ளியங்கிரியையும் இந்த ஈசுவரன் புரட்டிவிட்டானே :

'கங்கைசடை வைத்தவ —
னெடும்கயிலை வெற்(பு)ஒர்
அங்கையின் எடுத்தன(து)
ஆண்தொழில் மணித்தோள்
இங்கொர்மனி தற்(கு)எளிய
என்றனை !' எனத்தன்
வெங்கண்எரி யப்புருவம்
மீதுற விடைத்தான்.

[வெற்பு — மலை. அங்கை — உள்ளங்கை. ஆண்தொழில் மணித்தோள் — ஆண்மைத் தொழில் செய்த அழகிய தோள். மனிதற்கு — மனிதனுக்கு. வெங்கண் — கொடிய கண்கள். புருவம் மீதுற — புருவங்கள் (நெரித்து) நெற்றிமேல் ஏற. விடைத்தான் — பெருங்கோபம் கொண்டான்.]

'வெள்ளிமலையைச் சிவபெருமானோடு அலட்சியமாக எடுத்த தோள் இப்போது ஒரு சுள்ளி மனிதனுக்கு இளைத்துப் போயிற்றா?' என்று ராவணன் கோபிக்க, உள்ளபடியே இளைத்துப் போயிருக்கும் தோள்களைப் பார்த்துக்கொண்டே மாரீச வேதாந்தி,

சீதைஉரு வோ! நிருதர்
தீவினைய தன்றோ?

[நிருதர் — அரக்கர்.]
என்று கேள்வி போடுகிறான்.



286. வேதாந்தமும் வாளும்

'பெண்ணுருவமர் சீதை யுருவம்?' என்று மாரீசன் சொன்னதும், சீதாலட்சுமியின் தெய்வத் தன்மை குறித்து இந்த வேதாந்தி ஏதாவது சொல்லப் போகிறானோ என்று எதிர்பார்க்கக்கூடும். ஆனால் 'சீதை யுருவம் தீவினையின் உருவம்!' என்கிறான் மாரீச வேதாந்தி. 'ஆம், ராட்சஸத் தீவினையின் உருவம்தான்!' என்று நெஞ்சு பறைகொட்டப் பேசுகிறான்.

இந்த வேதாந்தியைப் பயம் பிடித்து ஆட்ட, ராவணனாகிய காரிய வாதியைக் காமப் பேய் தலைசுற்றி ஆட்டுகிறது. ஒருவன் நிலை மற்றவனுக்குத் தெரிந்தது தானே? பயப் பிராந்தி காமப் பிராந்தியை நோக்கி,

'வேதனைசெய் காமவிடம்
மேலிட மெலிந்தாய்;
தீதுரைசெய் தாய்; இனைய
செய்கை சிதைவன்றோ?
மாதுலனு மாய்,மரபின்
முந்தையுற வந்தேன்,
ஈதுரைசெய் தேன்; இதனை
எந்தை! தவிர்' கென்றான்.

[விடம் — விஷம். மேலிட — மிகுதியாக. இனைய — இப்படிப்பட்ட. சிதைவு — நாசம். மாதுலன் — மாமா. மரபு — குலம். முந்தை உற — (வயதில்) முற்பட. ஈது — இது. எந்தை — என் அப்பனே. தவிர்க — விட்டு விடுவாயாக.]

என்ற நயமும் பயமுமாகப் பேசுவதைக் கேளுங்கள்.

பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் தன்னை வேதனை செய்வதாக ராவணன சொன்ன போதிலும் அந்த உடல்மெலிவின் உண்மையான காரணத்தைப் பட்டவர்த்தனமாகச் சொல்லிக் காட்டுகிறான் மாரீசன். ராவணனோ இந்தக் கோழைத்தனத்தைத் தூ வென்று இகழ்ந்து, தனது வீரசூரப் பிரதாபத்தைப் புகழ்ந்து ஒரு சுய புராணம் பாடத் தொடங்குகிறான் :

திக்கயம் ஒளிப்ப,நிலை
    தேவர்கெட, வானம்
புக்கவர் இருக்கைபுகை—
    வித்(து) உலகம் யாவும்
சக்கரம் நடத்தும்எனை—
    யோ.தயர தன்தன்
மக்கள் நலி கிற்பர்? இது
    நன்றுவலி அன்றோ ?

[திக்கயம் - திக்கு யானைகள். வானம் புக்கவர் - மானம் புகுந்தவர். இருக்கை - இருப்பிடங்கள். புகைவித்து - கொளுத்திப் புகையச் செய்து. சக்கரம் — ஆஜ்ஞா சக்கரம். எனையோ - ராவணேசுவரனாகிய என்னையா. நலிகிற்பர் - வருத்தும் வலிமையுள்ளவராவர். வலி — வல்லமை !]

மண்ணிலும் கடலிலும் மட்டுமா, வானத்திலும் இந்த ஆஜ்ஞா சக்கரம் நடக்கிறது. இது நடக்கும் வழி யெல்லாம் தீயும் புகையும்தானே ! ‘புகை வித்து உலகம் யாவும் சக்கரம் நடத்தும் எனையோ?’ என்ற இறுமாப்பு ராவணாகாரமாக வந்து கிடக்கிறது இந்தப் பாட்டிலே !

‘இது நன்று வலியன்றோ?’ என்ற ஒரு பரிகாசச் சிரிப்பும் சிரித்து விட்டுக் கேட்கிறான் :



மூவுல கினுக்கும்ஒரு
    நாயகம் முடித்தேன்!
மேவலர் கிடைக்கின்,இதன்
    மேல்இனிய(து) உண்டோ?
ஏவல்செய கிற்றி,என(து)
    ஆணைவழி எண்ணிக்,
காவல்செய் அமைச்சர்கடன்
    நீகடவ துண்டோ?

[முடித்தேன் - (இங்கே) சூடிக் கொண்டேன். மேவலர் - பகைவர். ஏவல் செயகிற்றி — நான் ஏவிய தொழிலை நீ செய்யக் கடவாய். ஆணை — கட்டளை. கடன் - கடமை. நீ கடவதுண்டோ ?—நீ செய்யக் கடவதும் உண்டோ.]

‘உன்னை மந்திரியாக நான் நியமித்ததில்லையே. இட்ட பணியை ஏனென்று கேளாமல் செய்வது தானே ஏவலாள் கடமை?’ என்று சீறுகிறான் ராவணன்,





மாதுலனா மாய்மரபில்
முந்தையுற வந்தேன்

என்ற மாமாவை நோக்கி.

இந்த மாமா, ராவணனுடைய பரிகாசத்தையும் ஆத்ம ஸ்தோத்திரத்தையும் லட்சியம் செய்யவில்லை. உலகத்தை யெல்லாம் புகைவித்து ஆளும் அரசும் புகைந்து போம் ராமனுடைய அம்புமுனையிலே!—என்கிறது,

நின்றும் சென்றும்
வாழ்வன யாவும்
நிலையாவால்

என்ற வேதாந்தம், உள்ளுக்குள்ளே.

'நீ மந்திரியல்ல, ஏவலாள் தான்!' என்று அதட்டினானே மருமகன், அந்த மரியாதைப் பிழையும் கேவலம் மித்தை தான், நமது மாரீச வேதாந்திக்கு! ஆனால் அந்த வேதாந்தத்திற் கெல்லாம் ஒரு மருந்து இருக்கிறது; அந்த மருந்தும் இப்போது ராவணன் கையிலேதான் இருக்கிறது! அந்த மருந்தை,

மறுத்தனை யெனப்பெறினும்
நின்னைவடி வாளால் —

[மறுத்தனை எனப் பெறினும் — நீ மறுத்து விட்டாயாயினும். வடி வாள் — இந்தக் கூர்மையான வாள்.]

என்று உருவிக் காட்டும்போது, அந்தக் கூர்மை மித்தை யென்று மாரீசனுக்குத் தோன்றவில்லை.

ராவணன் வாளை உருவிக் காட்டிப் பேசும் பேச்சிலே வானாயுதங்கள் கூர்மையாகக் கடனாற்றும்போது ஏற்படும் சப்த ஜாலங்களைக் கேட்கிறோம்:

'மறுத்தனை யெனப்பெறினும்,
நின்னைவடி வாளால்
ஒறுத்தென மனக்குறை
முடிப்பதொழி கல்லேன்;
வெறுப்பன கிளத்தலுறும்
இத்தொழிலை விட்டென்
குறிப்பின்வழி நிற்றி,உயிர்
கொண்டுழலின்!' என்றான்.

[ஒறுத்து - (இங்கே) வெட்டித் தண்டித்து. என மனக்குறை—என் மனக்குறையை. முடிப்பது ஒழிகல்லேன் - முடிப்பதை விடமாட்டேன். கிளத்தலுறும் - சொற்களைச் சொல்லுகிற. நிற்றி - நிற்பாய். உயிர் கொண்டு உழலின் - உயிரைக் கொண்டு திரிய வேண்டுமானால்.]

'வாள் மித்தை யல்ல!' என்று தெரிந்து கொண்ட போதிலும், உலக மித்தை என்ற தத்துவம் மாரீசனின் உள்ளத்தை விட்டுப் போய் விடவில்லை:

தருக்கினர் கெடுவர் அன்றே,
தத்துவ நிலையிற்(று) அன்றோ?

[தருக்கினர் - செருக்குக் கொண்டவர்கள். தத்துவநிலை இற்று அன்றோ - தத்துவசாஸ்திர நிலைமை இந்தத் தன்மையதல்லவா.]

என்று தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான் மாரீசன்.

தன் பயத்தை மறைத்துக் கொண்டு, தனக்குப் பயமே கிடையாதென்றும் சொல்லிக் கொண்டு, 'நான் செய்யவேண்டியதைச் சொல்லித் தொலையப்பா!' என்று பரிதவிக்கிறது மாரீச வேதாந்தம்,—இன்னும் ராவணனுக்காகப் பரிதாபப்படுவது போலவே:

'உன்வயின் உறுதி நோக்கி
உண்மையின் உணர்த்தி னேன்மற்(று)
என்வயின் இறுதி நோக்கி
அச்சத்தால் இசைத்தேன் அல்லேன்!
நன்மையும் தீமை அன்றோ.
நாசம்வந் துற்றபோது?
புன்மையின் நின்ற நீராய்!
செய்வது புகறி' என்றான்.

[உன்வயின் - உன்னிடம். உறுதி - நன்மை. இறுதி - (இங்கே) கேடு. புன்மையின் நின்ற நீராய் - அற்பத்தனத்தில் நிற்கும் குணமுள்ளவனே. புகறி - சொல்வாய்.]

வாளுக்கு முன் வேதாந்தம் சரணாகதி செய்துவிட்டது. இனி வாள், வேதாந்தத்தைத் தழுவிக் கொள்கிறது. ஆம், ஒரு நிமிஷத்திற்கு முன் பயமுறுத்திய மருமகன் மாமனைக் கட்டித் தழுவி நிற்கிறான்.



287.

மாரீசன் பணிந்து விட்டதும் ராவணன் கோபம் தீர்ந்து குதுகலமாய் ஆலிங்கனம் செய்து கொள்கிறான். 'மாமா, நீ சொல்லுகிறபடி நான் ராமன் அம்பால் சாவது காமன் அம்பால் சாவதைவிட மோசமில்லையே, மேன்மைதானே?' என்கிறான். இந்தச் சமரசத்தையும், குழைவும் நெளிவுமான பேச்சையும் பாருங்கள், கேளுங்கள் :

'குன்றெனக் குவிந்த தோளாய்!
மாரவேள் கொதிக்கும் அம்பால்
பொன்றலின், இராமன் அம்பால்
பொன்றலே புகழுண் டன்றோ?
தென்றலைப் பகையைச் செய்த
சீதையைத் தருதி' என்றான்.

[மாரவேள் — மன்மதன். கொதிக்கும் அம்பு — வெதும்பச் செய்யும் அம்பு. பொன்றலின் — அழிவதைக் காட்டிலும். தென்றலைப் பகையைச் செய்த — தென்றலையும் பகையாக்கிய. தருதி — தருவாய்.]

மாரீச தரிசனம்

மருமகன் தன் கொதிக்கும் நெஞ்சைத் திறந்து காட்டிப் பலவீனத்தை ஒப்புக்கொண்டதும், மாரீசனும் தன் பலவீனத்தைத் தாராளமாக ஒப்புக் கொள்கிறான். பரஸ்பர ஒளிவு மறைவு இல்லாமல் மாமனும் மருமகனும் தங்கள் இதய தௌர்ப்பலத்தைப் பரிமாறிக் கொள்கிறார்கள். மருமகனிடம்தான் மாமா இப்போது வேதாந்தப் போர்வையை விலக்கி விட்டுத் தன் கோழை நெஞ்சை எப்படித் திறந்து காட்டுகிறான் :

ஆண்டையான் அனைய கூற,
‘அரக்கர்ஓர் இருவ ரோடும்,
பூண்டஎன் மானம் தீரத்
தவவனம் புக்க போழ்தில்,
தூண்டிய சரங்கள் பாயத்
துணைவர்பட் டுருள அஞ்சி
மீண்டயான் சென்று செய்யும்
வினைஎன்கொல்? விளம்பு கென்றான்.

[ஆண்டையான் – அந்த நிலையில் இருந்த ராவணன். அனைய – அந்தத் தன்மையுள்ள சொற்கள். பூண்ட என் மானம் – (என் தாயைக் கொன்றதால்) ராமனிடம் நான் கொண்ட வைரம். போழ்தில் – காலத்தில். வினை – தொழில். என்கொல் – என்னவோ. விளம்புக – சொல்வாயாக.]

‘முன்னமே ராமபாணத்திற்கு அஞ்சி ஓடிவந்த நான் இப்போது மீண்டும் போய்ச் செய்யக் கூடியதுதான் என்ன?’ என்று பரிதாபமாய்க் கேட்கிறான் மாரீசன். அந்தக் கேள்வியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட ராவணன், ‘உன் தாயைக் கொன்றவனைக் கொல்ல நான் இருக்கிறேன்; பயப்படாதே, மாமா! மாயையால் வஞ்சித்து அவனை அபகரிப்பதுதான் இப்போது உத்தேசம்’ என்று பதில் சொல்லுகிறான்.

இது கேட்ட மாரீசனுள்ளத்தில் மறுபடியும் வேதாந்தம் வாதாடுகிறது. ‘இந்த உயிரைக் காப்பாற்ற இன்னும் ஒரு வழி கிடைக்காதா?’ என்று தான். பொதுவாகப் பிறர்பொருட்டுத் தன்னையும் பலி கொடுக்கலாம் என்பதுதானே வேதாந்தம் சித்தாந்தம் எல்லாம்? ஆனால் ‘உன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லு’ என்றும் ஒரு வகை வேதாந்தம் உண்டல்லவா? அந்த வேதாந்தம், ‘மருமகனைப் பலி கொடுத்தாவது நீ பிழைத்துப் போக இது தான் ‘தக்க தருணம்’ என்று தூண்டுகிறது.

ஒரு நிமிஷத்திற்கு முன் ஒளிவு மறைவுஇன்றி உரையாடிய மாரீச நெஞ்சு இப்போது இரட்டைத் தான் போட்டுக் கொள்கிறது ராவணன் முன்பு! ‘மருமகனே! ராமன் மனைவியை வலிமையால் அன்றி வஞ்சனையால் அடைவது உன் பெருமைக்கு அழகில்லையே’ என்கிறான் மாரீசன் தந்திரமாக:

திறத்துழி அன்றி வஞ்சித்(து)
எய்துதல் சிறுமைத் தாகும்.

[திறத்துழி அன்றி – உன் திறமையினால் அல்லாமல். எய்துதல் – அடைதல். சிறுமைத்து ஆகும் – சிறுமையை உண்டாக்குவதாகும்.]

இப்போது மாரீச வேதாந்தம் ‘வலிமையே உரிமை தான்’ என்ற கொள்கையை ஒப்புக்கொள்கிறது. ‘இது தருமம் தான் (“அறத்தினது ஒக்குமன்றே!”)’ என்கிறது. சிறிது நேரத்திற்கு முன் ‘தருமமன்று’ எனக் கண்டித்ததை இப்போது ‘தருமம் தான்’ என்று சொல்லத் துணிகிறது. ஆனால் ‘வஞ்சனை வேண்டாம்’ என்கிறது வஞ்ச நெஞ்சு. ஏன்? ‘ராமனோடு போர் செய்து வென்று சீதையை அபகரித்துக்கொண்டு, மருமகனே! உன் வீரத்தை வளர்த்துக் கொள்வாயாக!’ என்று ஆசி கூறி மருமகனைப் போர்க்களத்திற்கு அன்றே அப்போதே அனுப்பி வைக்கவும் தயாராகி விடுகிறான் மாரீசன்,—கொலைக்களத்திற்குக் கொழுத்த ஆட்டை அனுப்பிவைப்பது போல.

இப்படி மாமாவே செருக்கைக் கிள்ளிவிட்டும் மருமகன் குதிபோட டுக்கொண்டு புறப்படத் தயாராக இல்லை. சிரிக்கிறான் ஒரு சிரிப்பு. 'அவர்களை வெல்லப் போரும் வேண்டுமா, சேனையும் வேண்டுமா?' என்று சிரித்த பின்,

தடக்கைவாள் தக்க தன்றோ ?


[தடக்கை - பெரிய கை. தக்கது - போதுமானது.]

என்று தன் கையிலுள்ள வாளை மறுபடியும் காட்டி, 'இது போதுமே தலைகளை வீசித்தள்ள !' என்கிறான். உண்மையில், இது போதும் மாரீச வேதாந்தத்தை மறுபடியும் சிந்தனைக் கடலில் பாய்ந்து செல்லாமல் தடுப் பதற்கு !

இப்போது குறிப்பாகத் தான் இந்தப் பயமுறுத்தல். வெளிப்படை யாக, 'புருஷர் இறந்தால் அவளும் இறந்துவிடுவாளே ; அதற்காகத் தான் உன் மாயை வேண்டும், வேதாந்தம் வேண்டாம்' என்கிறான். இந்தக் காரணத்தைக் காட்டிலும் அந்த வாள்தான் விவகாரத்தை மேலும் வளராத படி வெட்டி விடுகிறது.

இந்த நிலையில் மாரீசன் தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான் :

தேவியைத் தீண்டா முன்னம்
இவன்தலை சரத்திற் சிந்திப்
போம்வகை புணர்ப்பன் என்று
புந்தியால் புகல்கின் றேற்கும்,
ஆம்வகை ஆயிற் றில்லை,
யார்விதி விளைவை ஓர்வார் ?



[சரம் - பாணம். புணர்ப்பன் - செய்விப்பேன். புந்தி - புத்தி. புகல்கின்றேற்கும் - சொல்லிப் பார்க்கிற எனக்கும். ஓர்வார் — அறிவார்.]

இப்படித் தனக்குள் தானே புலம்பிக் கொண்ட மாரீசனுடன் இந்த வாளினும் கூர்மையான மூளையும் ஒத்துழையாமை செய்யத் தொடங்குகிறது. எவ்வளவோ சூழ்ச்சி செய்து பார்த்தும் மாரீச மதியையும் விதி வென்று விடுகிறது. 'நமக்கும் இறுதிக் காலம் நெருங்கி விட்டதோ?' என்ற பயத்திலே மூளை மந்தமாகி விட, மாரீசன்,

'என்னமா மாயம் யான் இங்(கு)
இயற்றுவ(து)? இயம்பு கென்றான்.

ராவணன் இஷ்டப்படி யெல்லாம் இயக்கக் கூடிய யந்திரமாகி விடுகிறது மாரீச மூளை. 'மான் காட்டி மான் பிடிக்க வேணும்' என்கிறார்களல்லவா? 'சீதை யென்ற பொன் மானைப் பொன் மானாகி மயக்குவாய்' என்று ராவணன் கட்டளையிடுகிறான். கட்டளையிட 'அப்படியே செய்வேன்' என்கிறான் மாரீசன்:

'பொன்னின்மான் ஆகிப் புக்குப்
பொன்னைமால் புணர்த்து கெ'ன்ன,
'அன்னது செய்வேன், என்று'
மாரீசன் அமைந்து போனான்.

[புக்கு — போய். பொன்னை — சீதையை. மால் புணர்த்துக — ஆசையையும் மயக்கத்தையும் மூட்டுவாயாக. அன்னது — அது. அமைந்து — சம்மதித்து.]

* * * *

தோல்வி — மனப்பான்மையில் முளைத்து வளர்ந்த சமயோசித வேதாந்தம் தோற்றுப் போகிறது. மாரீசன் ஒரு வழியே போகிறான், இனி வரப்போகும் நாடகத்திலே தனக்குரிய நடிப்பை மேற்கொள்வதற்கு. ராவணனோ வேறொரு வழியில் போகிறான், அதே நாடகத்தில் வேறொரு வேஷம் பூண்டு கொள்வதற்கு. அதோ மருண்டு செல்லும் மாமாவையும், இதோ நிமிர்ந்து, வேலாயுதம் தகதக வென்று மின்னப் போகும் மருமகனையும் பாருங்கள்:

'அன்னது செய்வென்' என்று,
மாரீசன் அமைந்து போனான்;
மின்னும்வேல் அரக்கர் கோனும்
வேறொரு நெறியிற் போனான்.

இந்த இரண்டு பிரகிருதிகளையும் விதி எப்படி, எங்கே, எவ்வளவு அவசரமாக இழுத்துப் போகிறது, பார்த்தீர்களா? இந்த வாள் முனைக்கும் அந்த அம்பு முனைக்கும் இடையே திண்டாடிய மாரீச வேதாந்தம் தயங்கித் தள்ளாடிப் போவதும், விதிக்கு ஒரு பலி காட்டி வென்று விட்டதாக மனப்பால் குடிக்கும் ராவண சித்தாந்தம் கம்பீரமாய்க் கால் வீசிப் போவதும், என்றும் மறக்க முடியாத காட்சி — இல்லையா?



288

சீதை பூக் கொய்து கொண்டிருக்கிறாள், பர்ணசாலையின் முன்வாசற் பூஞ்சோலையில், நீண்ட நேரமாக. இடை நோவ நடந்து நடந்து 'பூங் கொடிகளுக்கிடையே ஒரு நடையாடும் பூங்கொடி' என்று சொல்லுமாறு திரிந்து கொண்டிருக்கிறாள். கொய்யும் மலர்களுக்கிடையே வளையணிந்த மென்கையும் கொய்யா மலர் போல் திரிகின்றதாம்.

தேகம் மறந்த அழகு

இந்தப் பூக் கொய்யும் சித்திரம் எப்படி ஒரு சப்த சித்திரமாக வருகிறது பாருங்கள் :

நையா இடைநோ -
வநடந் தனளால்
வைதே கி,தன்வால்
வளைமென் கையெனும்
கொய்யா மலரால்
மலர்கொய் துறுவாள்.

[நையா — நைந்து. வைதேகி - விதேக ராஜகுமாரியான சீதை. வால் வளை — சுத்தமான வளைகள். கொய்துறுவாள் — கொய்து கொண்டு வருகிறவளாய்.]

காடுறை செல்வியின் மெலிந்த மேனி பூக் கொய்யும் இளைப்புடன் தோன்றும் இச்சித்திரத்திலே வைதேகி (வைதேஹீ) என்ற சப்தம்தான் எவ்வளவு இசைவாக இசைந்திருக்கிறது. சௌந்தரியம் தேகம் என்ற திரை விலகத் தரிசன மளிப்பதுபோலத் தோன்றுகிறது. இயற்கை யழகுகளுக்கிடையே இந்த அழகுகளின் அதி தேவதையும் மலர்ந்து விட்டது போலக் காண்கிறாள் வைதேகி. பாடிப் பாடி ரஸிக்க வேண்டிய பாட்டு.

பூக்கொய்து கொண்டிருக்கும் சீதை திடீரென்று ஒரு மானைப் பார்க்கிறாள். உடம்பெல்லாம் பொன்மயமாய்க் காதுகளும் கால்களும் மாணிக்க

மயமாய்த் தோன்றிய அதிசய மானைக் கண்ணுற்றதும், தன் கணவனும் அதைக் காண வேண்டுமென்று விரும்புகிறாள். 'அப்படி ஒரு மான் இருக்க முடியுமா?' என்பது குறித்து அண்ணனும் தம்பியும் விவரித்துக் கொண்டிருக்கும்போதே, சீதை ஆத்திரத்துடன் 'உங்கள் பேச்சு முடியுமளவும் மான் காத்திராது' என்கிறாள்.

'சீதா! எங்கே அந்த மான். காட்டு?' என்று அவன் பின் ராமன் வர, ராமன் பின் லட்சுமணனும் வருகிறான். 'இந்த வினோத மான் வஞ்சனை மான்' என்கிறான் லட்சுமணன். எப்படியானாலும் ராமன் பிடிக்க இசையத் தம்பி தடுக்கிறான். தடுத்து, 'அண்ணா, இதனை ஏவி விட்டுப் பின்னே எத்தனை அரக்கர்கள் காத்துக் கொண்டிருந்தாலும் அவர்களையெல்லாம் நானே கொன்று திரும்புவேன். மாயமானாக இல்லாவிட்டால் பிடித்துக் கொண்டுவருகிறேன்' என்கிறான்.

சீதையின் புலவி

சீதையோ தான் ஆசைப்படுகிற மானைக் கணவனே பிடித்துக் கொடுக்கவேண்டும் என்ற பிடிவாதத்துடன் பிணங்கிக் கொண்டு போகிறாள். இந்தக் காதல்-பிடிவாதத்தை எவ்வளவு ரஸமாக வெளியிடுகிறது செய்யுள் :



ஆயிடை அன்னம் அன்னாள்,
அமுதுகுத் தனையசெய்ய
வாயிடை மழலை இன்சொல்
கிளியினில் குழறி மாழ்கி,
'நாயக! நீயே பற்றி
நல்கலை போலும்' என்னாச்
சேயரிக் குவளை முத்தம்
சிந்துபு சிதறிப் போனாள்.

[ஆயிடை — அச்சமயத்தில். அன்னம் அன்னாள் — அன்னம் போன்ற சீதை. அமுது உகுத்து அனைய — அமுதம் சிந்தினாற் போன்ற. செய்ய — சிவந்த. வாயிடை மழலை இன்சொல் — வாயிலிருந்து வரும் இனிய மழலைச் சொற்களை. கிளியினில் குழறி — கிளி கொஞ்சுவது போலக் கொஞ்சிப் பேசி. பற்றி நல்கலை போலும்-பிடித்துத் தர மாட்டாய் போலும். என்னா - என்று சொல்லி. சேய் அரி - சிவந்த ரேகைகள். குவளை- (இங்கே) நீல மலர்

போன்ற கண்கள். முத்தம் — முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள். சிந்துபு — சிந்தி.]

காதலியின் கண்ணீருக்கு முன் லட்சுமணனின் தர்க்கவாதம் நிற்க முடியுமா? ராமன் உடனே தம்பியை நோக்கி, 'லட்சுமணா, நானே போய்ப் பிடித்து வருகிறேன் அந்த மானை. நீ பர்ணசாலையில் இவளைப் பாதுகாத்துக் கொண்டிரு' என்று சொல்லிவிட்டு, வில்லும் அம்புகளும் எடுத்துக் கொண்டு விரைந்து செல்லத் தொடங்குகிறான்.

அப்போது லட்சுமணனுக்குப் பளிச்சென்று விசுவாமித்திர யாகம் நினைவிற்கு வருகிறது. அந்தச் சந்தர்ப்பத்திலே, மாரீசன் தனது தம்பியான சுபாகு முதலிய அரக்கர்களுடன் இடையூறு செய்யத் தொடங்கியதும் நினைவிற்கு வருகிறது. ராம பாணங்களால் மற்றை அரக்கர்கள் இறந்ததும் மாரீசன் உயிர் தப்பிய செய்தியும் நினைவிற்கு வர லட்சுமணன், விரைந்து கொண்டிருக்கும் ராமன் காதில் விழுமாறு அந்தச் சந்தேகத்தையும் விண்ணப்பித்துக் கொள்கிறான் :

'முன்னமும் மகவாய் வந்த
மூவரின் ஒருவன் போனான் :
அன்னமா ரீசன் என்றே
அயிர்த்தனென்; இதனை ஐயா !
இன்னமும் காண்டி வாழி
ஏகென்ன இருகை கூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை
காத்தனன் புறத்து நின்றான்.

[மகவாய் — யாக சந்தர்ப்பத்தில். மூவரின் — மூன்று அரக்கர்களில். போனான் - தப்பிப் போனான். அன்ன மாரீசன் - அந்த மாரீசன். அயிர்த்தனென் — சந்தேகிக்கிறேன். இதனை - இந்த மானை. காண்டி — காண்பாய். ஏகு - செல்வாய். பொன்னனாள் - பொன் போன்ற சீதை. புக்க — புகுந்த. காத்தனன் - காவல் செய்வானாகி. புறத்து - புகுந்த. காத்தனன் - காவல் செய்வானாகி. புறத்து நின்றான் - வெளியே நின்றான்.]

'இன்னமும் காண்டி' - அதாவது, 'இன்னமும் ஆலோசித்துப் பார்ப்பாய்' — என்று லட்சுமணன் செய்த கடைசி எச்சரிக்கையையும் ராமன் பொருட்படுத்தவில்லை. 'யாதொரு துன்பமும் அண்ணனுக்கு நேரிடாமல் இருக்க வேண்டும்' என்ற கருத்தை உள்ளிட்டு 'வாழி' என்று தம்பி மனமுருகிச் சொன்ன அந்தப் பரிவு - வாழ்த்தையும் பொருட்படுத்தவில்லை. சீதையின் கோபத்தையே — ஆம், அந்தப் புலவியைத் தான் — பெரிதாகக் கருதுகிறான்.

இந்த நிலையில் சீதையின் முகமலர்ச்சி, ராமனின் புன்சிரிப்பு, தம்பிக்குக் கிடைத்த இருவர் புறக்கணிப்பு, தாயின் தவிப்பு, அண்ணனின் பரபரப்பான மான்வேட்டையின் ஆரம்பம் எல்லாம் எப்படித் தொடர்ந்து இணைந்து கிடக்கின்றன இப்பாட்டிலே :

மந்திரத் திளையோன் சொன்ன
வாய்மொழி மனத்துக் கொள்ளான்,
சந்திரற் குவமை சான்ற
வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய்
முறுவலன் சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளினன் அம்
மானினைத் தொடர லுற்றான்.

[மந்திரம் - மந்திராலோசனை. உவமை சான்ற - உவமானமாவதற்கு அமைந்த. சலம் - (இங்கே) புலவி. சிந்துரப் பவளச் செவ்வாய் - சிந்தூரமும் பவளமும்போலச் சிவந்த வாயில். முறுவலன் - புன்சிரிப்புடையவனாய். சிகரச் செவ்விச் சுந்தரத் தோளினன் - சிகரம்போலப் பூரித்த அழகிய தோள்களையுடைய ராமன்.]

*   *   *   *

சிந்துரப் பவளச் செவ்வாயும் முறுவலும், ராமன் நாடு துறந்து காடு செல்லவேண்டுமென்று கைகேயி கட்டளையிட்ட சந்தர்ப்பத்தை நினைப்பூட்டுகின்றன. அப்போது அவள் முன் ராமன்,

சிந்துரப் பவளச் செவ்வாய்
செங்கையிற் புதைத்து, மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை
மடக்குறத் துவண்டு நின்றான்.

[தானை - வஸ்திரம்.]

அச்சமயத்திலும், 'காட்டுக்குப் போ' என்று அவள் கட்டளையிட்ட பின்பும் ராமன் நின்ற நிலையும், அந்த முகமலரில் மலர்ந்த முறுவலும், இப்போது இந்த மாயமான் வேட்டையின் தொடக்கத்திலும் காணப்படுகின்றன. ராமன் ஏறிவரும் தியாக ஏணியில் இன்னும் ஒரு முக்கியமானபடியல்லவா எதிர்ப்படுகிறது ?



289. மாய வேட்டை

அகண்ட கோதாவரிக் கரையிலே, பஞ்சவடி யென்ற அந்தப் பழைய காட்டிலே விஜய கோதண்டமும் சுந்தரத் தோளுமாக, சீதையின் புலவி கருதிப் புன்னகை புரிந்த வண்ணம் மான் வேட்டையாடப் புறப்படுகிறான். முன்னும் பின்னும் உலகம் கண்டிராத ஒரு மான் வேட்டை.

மானைப்போலத் துள்ளி வந்து ஆச்சரியமாகச் செய்தி சொன்னவளின் நெஞ்சிலே நிறைந்த ஆசை, முகத்திலும் கண்களிலும் பொங்கிவழிந்து பேச்சிலும் பிரதிபலித்து ராமனை வசீகரித்து விட்டது. லட்சுமணனுக்கு மாத்திரம் ஆராய்ச்சி யறிவு தெளிவா யிருந்தது. 'இப்படி ஒரு மான் இருக்கவே முடியாது. மாய மானாகத்தான் இருக்கவேண்டும். மாரீசன் என்ற மாயாவிதானோ?' என்றெல்லாம் தர்க்க ரீதியாகப் பேசிய தம்பியின் பேச்சும், காதலின் பிணக்கிற்கும் பிடிவாதத்திற்கும் கொஞ்சலுக்கும் குமுறலுக்கும் எதிரே நிற்கமுடியவில்லை. லட்சுமணன் எழுப்பிய சந்தேகத்தைப் பரிசீலனை செய்து பார்க்கவும் முடியாதபடி ராமனையும் தடுத்து விடுகிறது காதல்.

காதலியோ வனத்திலுள்ள அபாயங்களையும் அரக்கர் மாயங்களையும் கொஞ்சமும் அறிந்திராத கள்ளங் கவடற்ற 'குழந்தை'. காதலாலும் கோபத்தாலும் தெளிவில்லாமல் தடுமாறிக் கிளிபோல் கொஞ்சியும், பிடிவாதமாய்ப் பிணங்கியும் பேசியது ராமன் காதில் விழுந்து உள்ளத்தை முற்றும் கலக்கிவிட்டது. அமுதம் சிந்தினாற்போன்ற வார்த்தைகளோடு, முத்துப்போலச் சிந்திச் சிதறிய கண்ணீர்த் துளிகளும் சேர்ந்து ராமலட்சுமண ஸம்வாதத்தை முறித்து விட்டன. ராமனையும் இந்த மாயப் பொன்மான் வேட்டையில் செலுத்தி விட்டன.

கவிஞன் கண்ணிலும் கருத்திலும் கண்ட மான்

சரி, ராமன் மானைத் தொடர்ந்து போகிறான். மானும் அழகாய் அடியிட்டுச் செல்லுகிறது. முதன் முதல் சாதாரணமாய்த் தான் ஓடு


கிறது. மெள்ள மெள்ள ஓட்டத்திலே வெறி பிடிக்கிறது. இடையிடையே துள்ளித் துள்ளி மருண்டு மேலெழும்பிக் குதிக்கிறது. கடைசியாகக் காதுகளை நெரித்து நீட்டிக் கால்களை மார்போடு சேர்த்துப் படுவேகங் காட்டித் தாவிப் பாய்ந்து ஓடுகிறது:

மிதித்தது; மெல்ல மெல்ல
வெறித்தது; வெருவி மீதில்
குதித்தது; செவியை நீட்டிக்
குரபதம் உரத்தைக் கூட்டி,
உதித்தெழும் ஊதை உள்ளம்
என்றிவை உருவச் செல்லும்
கதிக்கொரு கல்வி வேறே
காட்டிய தொத்த தன்றே!

[வெருவி – வெருண்டு. மீதில் – மேலெழும்பி. குரபதம் – குளம்போடு கூடிய பாதம். உரம் – மார்பு. உதித்து எழும் – தோன்றி வீசுகிற. என்றிவை – என்ற இவை. உருவ – ஊடுருவ. கதி – வேகம்.]

இன்று விஞ்ஞானப் பெரு வளர்ச்சியால் படுவேகத்தை உணர்ந்து வருகிறோம். சந்திர மண்டல யாத்திரையும் நனவாகக்கூடிய காலம் வெகு தூரத்தில் இல்லை. இப்படி ஒரு புதிய வேக-போக நாகரிகம், ஒரு புதிய விஞ்ஞானக் கல்வி இன்றைய உலகில் நம் கண்முன் வளர்ந்து வருகிறது. இன்றைய கனவு நனவுகளுக்கும் சேர்ந்தே அந்த மாயப் பொன் மான் ஒரு புது வழி, ஒரு புதுமைக் கல்வி காட்டுவது போல அந்தக் கல்வியிலாகாவின் அதிகாரத்துடன் அந்தக் கல்வியமைச்சர் தோரணையில் கொள்கை பேசுகிறது கவிஞனின் மனோபாவம்.

வாயுவேக மனோபாவங்களைக் காட்டிலும் சண்டப்பிரசண்டமாய்ச் செல்லும் மானை ஓட்டிச் சென்ற ராமனும் அந்தக் காட்டிலே தொடர்ந்து திரிந்தான். திடீரென்று மான் ஒரு குன்றில் ஏறும்; ராமனும் ஏறுவான். பனிச்சென்று அது மலையில் தங்கியுள்ள மேகக் கூட்டத்தினிடையே குதிக்கும்; ராமன் அங்கும் தாத்திப் போவான். இடைவிடாது உடன் தொடர்ந்து செல்லும் போதே மான் எப்படியோ வெகு தூரம் விலகி ஓடிவிடும். ராமன் சற்றுத் தாமதித்தால், அதுவும் தன் வேகத்தை மட்டுப்படுத்தி, மந்தகதியாகவும் செய்து கொண்டு இவன் நெருங்கி வரும்வரை 'ஐயோ பாவம்!' என்பதுபோல் நிற்கும். நின்று, தொட்டுப் பிடிக்கக் கூடிய நிலையில் அவ்வளவு பக்கத்திலும் அவ்வளவு சாதுவாய்க் காணப்படும். மீண்டும் தொடர்ந்து போகும்போது, நிற்பது போலவே நெடுந்தூரம் 'கம்பி நீட்டி' விடும்.



கற்பனையில் கண்ட மான்

இப்படிப் போகும் மாய வேகத்தோடு இது செய்யும் ஜாலங்களையும் சாகஸங்களையும் பாருங்கள் :

குன்றிடை இவரும் ; மேகக்
குழுவிடைக் குதிக்கும் ; கூடச்
சென்றிடின் அகலும் ; தாழின்
தீண்டலாம் தகைமைத் தாகும் ;
நின்றதே போல நீங்கும் ;
நிதிவழி நேயம் நீட்டும்
மன்றலங் கோதை மாதர்
மனமெனப் போயிற் றம்மா !

[குன்றிடை - குன்றில். இவரும் - ஏறும். அகலும் - வெகு தூரம் விலகிவிடும். தாழின் - தாமதித்தால். நிதிவழி - பொருளின் அளவிற்குத் தகுந்த வழி. மன்றல் அங்கோதை மாதர் - மணமுள்ள அழகிய கூந்தலையுடைய விலைமகளிர்.]

பர்ணசாலையிலிருந்து நீண்ட தூரம் வந்துவிட்டான் ராமன். மான் வேட்டை மாயவேட்டை தான் !

'மாயமே ஆய தேநாள்
வருந்திய(து)' என்றான் வள்ளல்.

[வருந்தியது - இப்படி வருத்தமடையக் காரணமாயிருப்பது.]



அரக்கர் மாயம் ராமனுக்கும் தெளிவாகிறது. 'இனி இவன் பிடிக்க மாட்டான், மடிக்க முயல்வான்'' என்று மாய மானும் குறிப் பறிந்து கொள்கிறது. உடனே தப்ப உபாயம் தேடுகிறது. எந்த வேகம் இதுவரையில் ராமனையும் வஞ்சித்து இவ்வளவு தூரம் இழுத்து வந்து விட்டதோ, அதே வெற்றி தந்த வேகத்தைக் கொண்டு உயிர்தப்ப எண்ணி உயர ஆகாய வீதியிலே ஓங்கிப் பாய்கிறான் மானாக வந்த மாயாவி :

'பற்று வான்இனி
அல்லன்; பகழியால்
செற்று வானில்
செலுத்தலுற் றான்'என,
மற்ற மாய
அரக்கன் மனக்கொளா,
உற்ற வேகத்தின்
உம்பரின் ஓங்கினான்.

[பகழி — அம்பு. செற்று — கொன்று. மனக்கொளா — மனத்தில் கொண்டு. உற்ற - மிக்க. உம்பரின் - வானத்தில்.]

நிலத்தில் ஓடிக்கொண்டிருந்த மாயமான் வானில் ஓங்கிப் பாய்ந்ததும்,

அக்க ணத்தினில்
ஐயனும் வெய்யதன்
சக்க ரத்தின்
தகைவரி தாயதோர்
செக்கர் மேனிப்
பகழி செலுத்தினான்.

[வெய்ய - (துஷ்டருக்குக்) கொடிய. சக்கரத்தின் - சக்ராயுதம் போல. தகைவு அரிதாயது - தடுக்க முடியாததான. செக்கர்மேனிப் பகழி - சிவந்த வடிவமுள்ள அம்பு.]

ராம பாணம் அந்த வஞ்ச நெஞ்சில் தைத்ததும் அலறிய குரலொன்று — அழைத்தது போன்ற அலறல் — திக்கெங்கும் பரவுகிறது. அதே சமயத்தில் குன்று போலக் கீழே விழுந்து கிடக்கிறான் ஒருவன் :

நெட்டி லைச்சரம்
வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு -
தேபகு வாயினால்
அட்ட திக்கினும்
அப்புற மும்புக
விட்ட மைத்தொரு
குன்றென வீழ்ந்தனன்.

[நெட்டிலைச் சரம் - நீண்ட, கூர்மையான, இலைவடிவாயுள்ள பாணம். பகுவாய் - பிளந்த வாய். அட்ட திக்கு - அஷ்ட திக்கு.]

தம்பியின் தெளிந்த அறிவை வியந்து வாழ்த்துகிறது ராமனுள்ளம் :

'ஐயன் வல்லன்! என்
ஆருயிர் வல்லன்! நான்
உய்ய வந்தவன்
வல்லன்!' என்(று) உன்னினான்.

இப்படித் தம்பியை வாழ்த்திய வண்ணம், விழுந்து கிடக்கும் அரக் கனை நோக்குகிறான் அண்ணல். ஆஹா, அந்தப் பொல்லாத சண்டாள முகம் தான்!—யாகசாலையில் தப்பியவன் பழிவாங்க வந்து விட்டான். தம்பியின் ஊகம் எவ்வளவு சரியாகி விட்டது!



290. முக்கியமான மாறுதல்

தம்பியின் அறிவுத் தெளிவை ராமன் வியந்து செயல் மறந்திருக்கும் போதே, கதறிக் கொண்டு விழுந்த மாரீச வடிவம் ராமன் கவனத்தை முற்றும் கவர்ந்து விட்டது :

நீசன் மேனியை
    நின்(று)உடன் நோக்கினான்,
'மாசில் மாதவன்
    வேள்வியின் வந்தமா-
ரீச னேஇவன்'
    என்பதும் தேறினான்.

[மாசில் — மாசு இல்லாத. மாதவன் — (இங்கே) விசுவாமித்திரன்.]

கலங்கித் தெளிந்து கலங்குகிறான்

'ஹா ஸீதே! லக்ஷ்மணா!" என்று திக்கெட்டும் முட்ட அலறி விழுந்தானே அரக்கன், அந்தக் குரலைக் குறித்து இப்போதுதான் ராமனுள்ளம் சிந்திக்கிறது. 'என் குரலாகச் சீதையையும் தம்பியையும் கதறியழைத்தானே பாவி, ஐயோ! இந்தக் குரல் கேட்டுச் சீதை தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பாளே' என்று தத்தளிக்கிறது உள்ளம் :

'உழைத்த வாளி
    உரம்புகப், புல்லியோன்
இழைத்த மாயையின்
    என்குர லால்இசைத்(து)
அழைத்த துண்(டு);அது
    கேட்(டு)அயர் வெய்துமால்
மழைக்கண் ஏழை'யென்(று)
    உள்ளம் வருந்தினான்.

[உழைத்த — வருத்தம் உண்டாக்கிய. வாளி — அம்பு. உரம் — மார்பு. புல்லியோன் — அற்ப குணமுள்ள அரக்கன். அயர்வு எய்தும் —

மயக்கம் அடைவானே. மழைக்கண் ஏழை – (இங்கே) மழைபோலக் கண்ணீர் வடிக்கிற சீதை.]

இப்படிச் சிந்தை நொந்த ராமன் ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொள்ளவும் செய்கிறான். மான்வடிவிலும் மாரீச வடிவம் கண்டு கொண்ட தம்பியின் அந்த அறிவுத் தெளிவு சீதையையும் தேற்றித் தெளிவிக்கும் என்று தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான். 'என்னுடைய ஆற்றல் அறியாதவனா அறிஞனான தம்பி? மானை மாய மானென்று கண்டவன் இந்தக் கூக்குரலையும் மாயக்குரல் என்று சீதைக்கும் உணர்த்துவான்' என்பது ராமன் நம்பிக்கை.

இப்படியெல்லாம் ராமன் தன் மனத்தை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டபோதிலும், மன அமைதி ஏற்படவில்லை. 'நம்மையே மயக்கிவிட்ட மாயாவி வந்த காரியம் மாள்வதற்குத்தானா' என்ற கேள்வி அடுத்த கணத்திலேயே ராமனுள்ளத்தில் பிறக்கிறது.

மாள்வ தேபொரு –
ளாகவந் தானலன்

என்ற விடையும் பளிச்சென்று இந்த உள்ளத்திலேயே கிடைக்கிறது.

இந்த மின்வெட்டிலே, 'பொல்லாத சூழ்ச்சியொன்று இதில் இருக்க வேண்டும். சாகும்போது என் குரல்போல் கூக்குரல் இட்டதில், ஏதோ



ஒரு பெருங் கேடு விளைவிக்கும் சூழ்ச்சி இருக்கத்தான் வேண்டும்' என்பதும் தெரிகிறது. இன்னதென்று தெரியாத அந்தக் கேடு உள்ளத்தை அதிகமாக வருத்துகிறது. 'அப்படிப்பட்ட கேடு சூழ்வதற்கு முன்னமே பர்ணசாலைக்குத் திரும்புவோம்' என்று விரைகின்றான்.

'மாள்வ தேபொரு-
ளாகவந் தானலன்;
சூழ்வ தோர்பொருள்
உண்டிவன் சொல்லினால்;
மூள்வ(து) ஏதம்;
அதுமுடி யாமுனம்
மீள்வ தேநலன்'
என்றவன் மீண்டனன்.

[சூழ்வது — (இங்கே) தந்திரமாகவும் வஞ்சனையாகவும் ஆலோசிப்பது. ஏதம் — தீமை.]

கலங்கிக் கசந்து ஏசுகிறாள்

'ஹா சீதே! லக்ஷ்மணா!' என்று அரக்கன் உரக்கக் கதறியது கேட்டதும் சீதை உண்மையறியாது வருந்தினாளா? ராமன் எதிர்பார்த்த படி வருந்தியது மட்டுமா? லட்சுமணன் எவ்வளவோ தேறுதல் கூறியும் துளி ஆறுதலும் அடையவில்லை. 'குரல் ராமனுடையதுதான்; ராமனுக்கு அபாயம் தான்!' என்றே மயங்குகிறாள்:

எயிற லைத்து
முழைதிறந்(து) ஏங்கிய
செயிர்த லைக்கொண்ட
சொல்செவி சேர்தலும்,
குயில்த லத்திடை
உற்றதோர் கொள்கையாள்
வயிற லைத்து
விழுந்து மயங்கினாள்.

['எயிறு அலைத்து - பல்லைக் கடித்துக் கொண்டு. முழை - மலைக் குகை; (இங்கே) குகை போன்ற வாய். ஏங்கிய - (இங்கே) ஏங்கிக் கூக்குரலிட்ட. செயிர் - (இங்கே) மரண வேதனை. தலைக்கொண்ட - மேற்கொண்ட. தலம் - தரை. உற்றதோர் கொள்கையாள் - விழுந்து விட்டாற் போன்ற தன்மையுடையவளாய். வயிறு அலைத்து - வயிற்றில் அடித்துக் கொண்டு.]

கீழே விழுந்து புரண்டு, 'அறிவில்லாத நான் "மானைப் பிடித்துத் தா" என்று வாழ்வை முடித்து விட்டேனே!' என்று ஏங்குகிறாள்:

'பிடித்து நல்(கு)இவ்
வுழையெனப் பேதையேன்
முடித்த னென்முதல்
வாழ்வென' மொய்குழல்
கொடிப்ப டிந்த-
தென, நெடுங் கோளரா
இடிக்கு டைந்த-
தெனப்புரண் டேங்கினாள்.

[நல்கு - கொடு. உழை - மான். முடித்தனென் முதல்-அடியோடே தொலைத்து விட்டேன். மொய் குழல் - அடர்ந்த கூந்தலையுடைய சீதை; (இங்கே) தலைவிரிகோலமா யிருந்த சீதை. கொடிப் படிந்தனென - பூங் கொடியொன்று தன் கொழுகொம்பை இழந்து தரையில் விழுந்ததுபோல. கொடுங் கோளரா - நீண்ட வலிமையுள்ள பாம்பு. இடிக்கு உடைந்தனென - இடியோசை கேட்டுச் சோர்ந்தது போல்.]

லட்சுமணனே சீதையைப் போல் அமைதியை இழந்து விடாமல் நின்று கொண்டிருக்கிறான். 'அந்த மரண வேதனைக் குரல் யார் குரல்?' என்பது அவனுக்குத்தான் தெரியுமே. ஆனால், அவன் வருத்தமே இல்லாமல் அப்படியே நின்ற நிலை சீதையை மேலும் கலக்கிவிடுகிறது. சோகத் தோடு மனக் கசப்பும் அதிகரிக்கிறது:

'குற்றம் வீந்த
 குணத்தின்எம் கோமகன்,
மற்றை வாள்அரக்-
 கன்புரி மாயையால்,
இற்று வீழ்ந்தனன்
 என்னவும், என்அயல்
நிற்றி யோஇளை
 யோய்ஒரு நீ?' என்றாள்.

[குற்றம் வீந்த — குற்றமே இல்லாத. எம் கோமகன் — நமது தலைவன். மற்றை வாள் அரக்கன் — எதிரியாக வந்த கொடிய அரக்கன். புரி மாயை — செய்த மாயை. இற்று — (இங்கே) அபாயமுற்று. என் அயல்— என் அருகிலேயே. நிற்றியோ — நின்று கொண்டிருக்கிறாயோ. இளையோய் ஒரு நீ — இளையவனாய் அவனோடு ஒன்றுபட்ட நீ.]

தமையன் துணை வேண்டிக் கூப்பிட்டும் தம்பி உதவி செய்ய ஓடாமல் தன்னருகே நிற்பது சீதைக்கு மனக் கசப்புடன் ஆறாத மனக் கொதிப்பையும் உண்டாக்குகிறது. 'பங்காளியல்லவா? உடம்பு சிவப்பு, உள்ளம் கறுப்பு! காடு துறந்து தொடர்ந்து வந்ததெல்லாம் இந்த அபாய காலத்தில் இப்படிக் கைவிடத்தானா? அண்ணனைக் காக்கக் கருதாமல் என்னைக் காத்து நிற்பதால் பயன் என்ன?' என்றெல்லாம் பொருள் படக்கூடும் சீதையின் வெறுப்புரை. ரப்பர் போல் இழுத்துப் பார்த்தாலும் இதற்கு மேல் பொருள் கூறுவது இழுக்கு. இன்னும் இழுத்தால் கவியே இற்றுப் போகும். பேரறிஞரான வ. வே. சு. ஐயர் முதலானவர்களின் அபிப்பிராயமும் இதுவே.

ஆதிகாவியத்தில் இந்தச் சந்தர்ப்பத்திலே சீதை லட்சுமணனை நோக்கிக் கூறியதாக வரும் விஷயங்களெல்லாம் இந்த வெறுப்புரையிலும் அடங்கி யிருக்க வேண்டும் என்று ஊகஞ் செய்வோர், பொதுவாகப் புதிய இலக்கிய சிருஷ்டி இன்ன தென்பதையும், சிறப்பாகக் கம்பசித்திரம் இன்ன தென்பதையும் அறியாதவர்களே. ஆதிகாவியத்திலிருந்து தமிழ்க் காவியம் வேண்டுமென்றே செய்து கொண்ட முக்கியமான மாறுதல்களில் இந்தச் சந்தர்ப்பமும் ஒன்று என்பதை ஆராய்ச்சி யறிஞரும் விமர்சகருமான திரு கே. என். சிவராஜ பிள்ளை தமது ஆங்கில அறிவுரை ஒன்றில் தெளிவாக வற்புறுத்தியிருக்கிறார்.